# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

**விளம்பர எண்.:** 628

**அறிவிக்கை எண்.** 24 /_2022 **நாள்:** 13.09.2022

**தமிழ்நாடு சட்டப்பேரவை தலைமைச்செயலகப் பணிகளில் அடங்கிய ஆங்கில நிருபர்** மற்றும் **தமிழ் நிருபர் பதவிக்கான காலிப் பணியிடங்களில் நேரடி நியமனம் செய்வதற்கான கணினி வழித் தேர்விற்கு 12.10.2022 அன்று வரை இணைய வழி மூலம் மட்டுமே விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

**இந்த பதவிக்கான தேர்வு கணினி வழித் தேர்வாக நடத்தப்படும்.**

## எச்சரிக்கை

- **தேர்வாணையத்தின் தெரிவுகள் அனைத்தும் விண்ணப்பதாரரின் தரவரிசைப்படியே மேற்கொள்ளப்படுகின்றன.**
- **பொய்யான வாக்குறுதிகளைச் சொல்லி, தவறான வழியில் வேலைவாங்கித்தருவதாகக் கூறும் இடைத்தரகர்களிடம் விண்ணப்பதாரர் மிகவும் கவனமாக இருக்குமாறு எச்சரிக்கப்படுகின்றனர்.**
- **இது போன்ற தவறான மற்றும் நேர்மையற்றவர்களால் விண்ணப்பதாரருக்கு ஏற்படும் எவ்வித இழப்புக்கும் தேர்வாணையம் எந்தவிதத்திலும் பொறுப்பாகாது.**
- **இணையவழி விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் அனைத்துத்தகவல்களுக்கும் விண்ணப்பதாரரே முழுப்பொறுப்பாவார். விண்ணப்பதாரர், தேர்விற்கு இணையவழியில் விண்ணப்பிக்கும்பொழுது, ஏதேனும் தவறு ஏற்படின், தாங்கள் விண்ணப்பித்த இணையச்சேவைமையங்களையோ** ***/பொதுச் சேவை மையங்களையோ குற்றம் சாட்டக் கூடாது. விண்ணப்பதாரர் பூர்த்தி செய்யப்பட்ட இணையவழி விண்ணப்பத்தினை உரிய சான்றிதழ்களுடன் [பிற்சேர்க்கை II-ல் காண்க] இறுதியாக சமர்ப்பிக்கும் முன்னர், நன்கு சரிபார்த்தப் பின்னரே சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்.***
- **விண்ணப்பதாரர்கள் இணைய வழி விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும்போது சான்றிதழ்கள் / ஆவணங்களை இணைய வழி விண்ணப்பத்தில் வழங்கப்பட்ட அனைத்து உரிமை கோரல்களுக்கும் / விவரங்களுக்கும் ஆதரவாக கட்டாயமாக பதிவேற்றம் செய்யாமல், இணையவழி விண்ணப்பத்தை சமர்ப்பிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்.**

- இந்த பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு முன் விண்ணப்பதாரர்கள் இவ்வறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் / வழிமுறைகள் / வழிகாட்டுதல்கள் ஆகியவற்றை படித்து பார்க்குமாறு தெரிவிக்கப்படுகிறார்கள். தெளிவுரைகள் ஏதேனும் தேவையெனில் விண்ணப்பதாரர்கள் இணையவழி விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கு இறுதி நாளுக்கு முன் தொலைபேசி அல்லது மின்னஞ்சல் மூலமாக கோரலாம். விண்ணப்பதாரர்கள் இணையவழி விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளையும் பின்பற்றுமாறு தெரிவிக்கப்படுகிறார்கள்.

விண்ணப்பதாரர்கள் பதிவுக்கட்டணமாக ரூ.150/-ஐ (ரூபாய் நூற்று ஐம்பது மட்டும்) செலுத்தி தங்களது அடிப்படை விவரங்களை நிரந்தரப்பதிவு மூலமாக (OTR) கட்டாயமாக பதிவு செய்து கொள்ள வேண்டும். இந்த நிரந்தர பதிவு முறையில் பதிவு செய்த விண்ணப்பங்கள் பதிவு செய்த நாளிலிருந்து 5 வருட காலங்களுக்கு செல்லத்தக்கதாகும். அதன் பிறகு உரிய பதிவுக் கட்டணத்தைச் செலுத்தி புதுப்பித்துக் கொள்ள வேண்டும். நிரந்தர பதிவானது எந்த ஒரு பதவிக்கான விண்ணப்பமாக கருதப்படமாட்டாது. மேலும்விவரங்களுக்கு "விண்ணப்பதாரர்களுக்கானஅறிவுரைகள்" பத்தி-2-ஐகாண்க)

## 2.பணியிடங்கள் பற்றிய விவரங்கள்

| பதவியின் பெயர் | பணியின் பெயர் மற்றும் பணிக்குறியீட்டு எண் | காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை | சம்பள ஏற்ற முறை |
|---|---|---|---|
| ஆங்கில நிருபர் **பதவிக் குறியீட்டு எண்**:2090) | தமிழ்நாடு சட்டப்பேரவை தலைமைச் செயலகப் பணிகள் (குறியீட்டு எண்: 061) | 6 | ரூ. 56,100— 2,05,700 (நிலை-22) |
| தமிழ் நிருபர் (**பதவிக் குறியீட்டு எண்**:3202) | | 3 | |

*குறிப்பு:-*

குறிப்பிட்டு சொல்லப்பட்டிருந்தாலன்றி, அறிவிக்கப்பட்ட காலிப்பணியிடங்களின் எண்ணிக்கையானது தோராயமானதாகும். மேலும் காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை மாறுதலுக்குட்பட்டதாகும். விவரங்களுக்கு விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள் பத்தி 11 (A)-ஐக் காண்க.

### 3. *காலிப்பணியிடங்களுக்கான பகிர்மானப் பட்டியல்*

**இட ஒதுக்கீடு விதி இத்தெரிவிற்கு பொருந்தும்.**

| ஆங்கில நிருபர் | |
|---|---|
| பொது.பி.( பொது) | 1 |
| பொது.பி.(பெ) | 1 |
| பி.வ (பொது) | 1 |
| மி.பி.வ/சீ.ம (பொது) | 1 |
| ஆ.தி (பொது) | 1 |
| ஆ.தி(அ) (பெ)தவக | 1 |
| மொத்தம் | 6 |

| தமிழ் நிருபர் | |
|---|---|
| பொது.பி.( பொது) | 1 |
| மி.பி.வ/சீ.ம (பொது) | 1 |
| ஆ.தி(அ) (பெ)தவக | 1 |
| மொத்தம் | 3 |

***விரிவாக்கம்:-  பொது.பி – பொதுப்பிரிவு. பி.வ - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர். மி.பி.வ /சீ.ம - மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் /சீர் மரபினர். ஆ.தி – ஆதிதிராவிடர். ஆதி(அ) - ஆதிதிராவிடர்(அருந்ததியர்); பொ- பொது. பெ- பெண்கள். த.வ.க – தமிழ் வழிக் கல்வி.***

### 4. *முக்கியமான நாட்கள் மற்றும் நேரம்:-*

| | | |
|---|---|---|
| அ | அறிவிக்கை நாள் | 13.09.2022 |
| ஆ | இணையதளம் மூலம் விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்குரிய இறுதி  நாள் | 12.10.2022 |
| இ. | இணையவழி விண்ணப்பத்தை திருத்தம் செய்வதற்கான காலம் | 17.10.2022 நள்ளிரவு 12.01 முதல் 19.10..2022 இரவு 11.59 வரை |
| **கணினி வழித்தேர்வு நடைபெறும் நாள் மற்றும் நேரம்** | | |
| ஆங்கில நிருபர் மற்றும் தமிழ் நிருபர் | தாள் -1 பாடத்தாள் (சுருக்கெழுத்து) பட்டயப்படிப்புத்தரம் ஆங்கிலம் (அ) தமிழ் | 21.12.2022 முற்பகல் 09.30 மணி முதல் முற்பகல் 11.00 மணி வரை. |
| | தாள் -2 <br> பகுதி -அ <br> கட்டாய தமிழ்மொழி தகுதித் தேர்வு(10ம் வகுப்புத் தரம்) <br> பகுதி-ஆ <br> பொது அறிவு (பட்டப்படிப்புத் தரம்) | 21.12.2022 பிற்பகல் 02.30 மணி முதல் பிற்பகல் 05.30 வரை |

**குறிப்பு:-**

**இத் தேர்வின் செயல்பாடுகளுக்கான உத்தேச காலநிர்ணயம் தொடர்பாக பிற்சேர்க்கை -V-ஐ காண்க.**

### 5 .தகுதிகள்

**அ. வயது வரம்பு** (01.07.2022 அன்றுள்ளபடி)

| விண்ணப்பதாரர்களின் இன வகைகள் | அதிகபட்ச வயது (பூர்த்தி அடைந்தவராக இருக்க கூடாது) |
|---|---|
| ஆ.தி., ஆ.தி(அ), ப.ப., மி.பி.வ/சீ.ம., பி.வ., பி.வ(மு) மற்றும் அனைத்து வகுப்புகளையும் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் | வயது வரம்பு இல்லை |
| "ஏனையோர்" | 32 ஆண்டுகள்[@] |

குறிப்பு:-

@ அரசாணை( நிலை) எண்.91, மனிதவள மேலாண்மைத் (எஸ்) துறை, நாள் 13.09.2021ன்படி, வயது உச்ச வரம்பு 30 ஆண்டுகளிலிருந்து 32 ஆண்டுகளாக உயர்த்தப்படுகிறது.

விளக்கம்:-

" உச்ச வயது வரம்பு இல்லை" என்றால் விண்ணப்பதாரர் விளம்பர அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளன்றோ, பதவிக்கு தெரிவு செய்யப்பட்ட நாளன்றோ மற்றும் பதவியில் அமர்த்தப்பட்ட நாளன்றோ 60 வயதினை பூர்த்தி செய்திருக்ககூடாது.

குறிப்பு:-

(i) ஆ.தி., ஆ.தி(அ), ப.ப., மி.பி.வ., / சீ.ம., பி.வ., மற்றும்பி.வ.(மு) தவிர "ஏனையோர்" மாநில, மத்திய அரசில் ஐந்தாண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்டு முறையான பணியில் பணிபுரிந்து வருபவர் இப்பதவிக்குரிய வயது வரம்பிற்குள் இருந்தாலும், இப்பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள் ஆவார்கள்.விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள் பத்தி 3(F) ஐக் காண்க.
[தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி முறைமைகள்) சட்டம் 2016, பிரிவு 3(r)-ல் குறிப்பிட்டுள்ளவாறு]

**வயது வரம்புச் சலுகை**

***நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகள்:-***

***நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பிற்கு மேல் பத்தாண்டு வரை வயது வரம்புச் சலுகை பெறத் தகுதியுடையவராவார்கள்.***

*[தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி முறைமைகள்) சட்டம் 2016, பிரிவு 64-ல் குறிப்பிட்டுள்ளவாறு]*

**முன்னாள் இராணுவத்தினருக்கு**

அ)ஆ.தி., ஆ.தி(அ), ப.ப., மி.பி.வ/சீ.ம, பி.வ., மற்றும் பி.வ.(மு) தவிர ஏனைய வகுப்பினைச் சார்ந்தவர்களுக்கு 50 வயது வரை சலுகை வழங்கப்படும்.

[தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 63 மற்றும் அரசாணை (நிலை) எண்.91, மனிதவள மேலாண்மை (எஸ்) துறை, நாள் 13.09.2021-இல் குறிப்பிட்டுள்ளவாறு]

ஆ) ஏற்கனவே ஏதேனும் ஒருபிரிவு / பணி / பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர், முன்னாள் இராணுவத்தினர் என்ற சலுகையைப் பெறமுடியாது.

[தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி முறைமைகள்) சட்டம் 2016, பிரிவு 3(j)ல் குறிப்பிட்டுள்ளவாறு]

## ஆ) கல்வித்தகுதி (13.09.2022 அன்றுள்ளபடி)

விண்ணப்பதாரர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகுதியினை அல்லது அதற்கு இணையான படிப்பினை பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து பெற்றிருக்கவேண்டும்.

I.ஆங்கில நிரருபர் பதவி—

| |
|---|
| i) Must hold a bachelor's degree.<br>ii) A pass in the Government technical examination in shorthand in English by 180 words per minute high speed test.<br>iii) A pass in the Government technical examination in typewriting in English by the senior grade.<br>Others things being equal preference shall be given to persons who are qualified to report in Tamil also. |

II. தமிழ் நிருபர் பதவி—

| |
|---|
| i) Must hold a bachelor's degree.<br>ii) A pass in the Government technical examination in shorthand in Tamil by 120 words per minute high speed test.<br>iii) A pass in the Government technical examination in typewriting in Tamil by the senior grade.<br>Others things being equal preference shall be given to persons who are qualified to report in English also. |

<u>குறிப்பு</u>

1. *நிர்ணயிக்கப்பட்ட இளங்கலைப் பட்டம் கல்வித் தகுதியினை* 10+ 2 (*அதற்கு இணையானத் தகுதி*) + *இளங்கலைப் பட்டம் தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள்* (*பணி முறைமைகள்*) *சட்டம்* 2016, *பிரிவு* 25-*ல் குறிப்பிட்டுள்ளவாறு பெற்றிருக்க வேண்டும்*. பட்டப்படிப்பிற்கான இறுதி தேர்வு முடிவு வெளியிடப்பட்ட நாளானது அறிவிக்கை நாளன்றோ அல்லது அதற்கு முந்தைய நாளாகவோ அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும். (*தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள்* (*பணி முறைமைகள்*) *சட்டம்* 2016, *பிரிவு* 20(4) (iv)-*ல் குறிப்பிட்டுள்ளவாறு*).

2. *இணைக் கல்வித் தகுதி பெற்றிருப்பதாக உரிமை கோரும் விண்ணப்பதாரர் இணைக்கல்வி என அறிவிக்கப்பட்ட அரசாணையினை சான்றாவணமாக சமர்ப்பிக்கும் பட்சத்தில் அவ்வரசாணையானது தேர்வுக்கான அறிவிக்கை நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ* வெளியிடப்பட்டிருக்க *வேண்டும். மேலும், அவ்வரசாணையினை இணையவழி விண்ணப்பத்துடன் இணைத்து* பதிவேற்றம் *செய்ய வேண்டும். தவறும் பட்சத்தில் அவ்விண்ணப்பதாரரின் விண்ணப்பம் உரிய வழிமுறைகளைப் பின்பற்றிய பிறகு* நிராகரிக்கப்படும். *அரசாணை இத்தேர்வின் அறிவிக்கை நாளுக்கு பிறகு வெளியிடப்பட்டிருப்பின் அஃது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.*

[*விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள் பத்தி* 9*ன் குறிப்பினைக் காண்க*].

(இ) <u>உடற்தகுதி சான்றிதழ்</u>

பணி நியமனதிற்காக தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் கீழ் குறிப்பிட்டுள்ள தரத்தில் உடற்தகுதிச் சான்றிதழைச் சமர்பிக்க வேண்டும். மாதிரி படிவம் *அறிவிக்கையின் பிற்சேர்க்கை - III-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச் சான்றினை தெரிவு செய்யப்பட்ட தேர்வர், தனது நியமன அலுவலரிடம் பணியில் சேரும் போது சமர்பிக்க வேண்டும்.*

| <u>நிர்ணயிக்கப்பட்டுள்ள பார்வையின் தரம்</u> | <u>உடற்தகுதி சான்றிதழ் படிவம்</u> |
|---|---|
| பார்வை தரம்-III அல்லது அதற்கு மேம்பட்ட தரம் | செயல் அலுவலர் மற்றும் தமிழ்நாடு அமைச்சுப் பணி , தமிழ்நாடு நீதி அமைச்சுப் பணி மற்றும் தமிழ்நாடு தலைமைச்செயலக அல்லாத பணிகளுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள படிவம் |

*தெரிவிற்கு வரும் கண்பார்வை குறைபாடுடைய விண்ணப்பதாரர்கள் தகுதி வாய்ந்த அரசுகண் மருத்துவ நிபுணரிடம்* (Specialist) *கண்பார்வைத் தகுதிச் சான்றிதழைப் பெற்று நியமன அலுவலரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.*

(ஈ) *<u>தமிழ் மொழியில் தகுதி</u>*

*விண்ணப்பதாரர்கள் போதுமான தமிழறிவு பெற்றிருக்க வேண்டும்.* (*மேலும் விவரங்களுக்கு "விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகளில்" உள்ள பத்தி* 14(I)-*ஐ காண்க*).

## 6. *<u>கட்டணம்</u>*

| | | |
|---|---|---|
| அ) | <u>பதிவுக் கட்டணம்</u><br>நிரந்திரப் பதிவுக்கட்டணம் (அ.ஆ.(நி) எண்.32, பணியாளர் (ம) நிர்வாக சீர்திருத்தத்துறை, நாள் 01.03.2017-இன் படி திருத்தியமைக்கப்பட்ட கட்டணம்)<br><u>குறிப்பு</u><br>நிரந்தர பதிவில் பதிவு செய்த நாளிலிருந்து ஐந்தாண்டுகள் முடிவுறாத விண்ணப்பதாரர்கள், இத்தேர்வுக்கான பதிவுக்கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்படுகின்றனர் | <u>ரூ.150/-</u> |
| ஆ) | <u>தேர்வுக் கட்டணம்</u><br><u>குறிப்பு</u><br>கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேர்வுக்கட்டணச் சலுகை பெற தகுதியுடையவர்கள் தவிர பிற விண்ணப்பதாரர்கள், இணையவழி விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும்போது தேர்வுக்கட்டணம் செலுத்த வேண்டும். | <u>ரூ.200/-</u> |

<u>குறிப்பு</u>

(1) விண்ணப்பதாரர் தங்களுடைய ஒரு முறைப் பதிவுடன் ஆதார் எண்ணை இணைப்பது கட்டாயமாகும். *"விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகளில்" உள்ள பத்தி* 2(B)-*ஐ காண்க.*

(2) ஒருமுறைப்பதிவு என்பது பதிவு செய்த நாள் முதல் ஐந்து ஆண்டுகள் வரைசெல்லுபடியாகும். ஐந்து ஆண்டுகள் முடிந்த பின்னர், விண்ணப்பதாரர், ஒருமுறைப்பதிவினை (One Time Registration), அதற்காக நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தினைச் செலுத்தி கட்டாயம் புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.

ஒருமுறைப்பதிவு என்பது தேர்வுக்கான விண்ணப்பத்திலிருந்து மாறுபட்டதாகும். விண்ணப்பதாரர் தேர்வு எழுத விரும்பும் ஒவ்வொரு தேர்விற்கும், தனித்தனியே இணையவழியில் விண்ணப்பிக்க வேண்டும். *[விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகளில்" உள்ள பத்தி 2(C)-ஐ காண்க].*

**தேர்வுக் கட்டணச் சலுகை:-**

| வகை | சலுகை |
|---|---|
| 1) ஆதிதிராவிடர்/ ஆதிதிராவிடர்(அருந்ததியர்), | கட்டணம் செலுத்த தேவையில்லை |
| 2) பழங்குடியினர் | கட்டணம் செலுத்த தேவையில்லை |
| 3) *மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர்* | மூன்று முறை மட்டும் கட்டணம் செலுத்தத் தேவையில்லை |
| 4) இஸ்லாமியரல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் /பிற்படுத்தப்பட்ட இஸ்லாமிய வகுப்பினர் | மூன்று முறை மட்டும் கட்டணம் செலுத்தத் தேவையில்லை |
| 5) முன்னாள் இராணுவத்தினர் | இரண்டு முறை மட்டும் கட்டணம் செலுத்தத் தேவையில்லை. |
| 6) *நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகள்* | *கட்டணம் செலுத்தத் தேவையில்லை.* |
| 7) ஆதரவற்ற விதவைகள் | கட்டணம் செலுத்தத் தேவையில்லை. |

குறிப்பு

1 முந்தைய விண்ணப்பங்களில் கோரப்பட்ட உரிமைகளின் அடிப்படையில், மொத்த தேர்வுக்கட்டண இலவச வாய்ப்புகளின் எண்ணிக்கை கணக்கிடப்படும்.

2 விண்ணப்பதாரர் பெறும் இலவச வாய்ப்புகளின் எண்ணிக்கையானது தெரிவின் எந்நிலையிலும் தேர்வாணையத்தால் சரிபார்க்கப்படும்.

3 விண்ணப்பதாரர் தம்முடைய முந்தைய விண்ணப்பங்கள் தொடர்பான தகவல்களை மறைத்து விண்ணப்பக் கட்டணம் செலுத்துவதிலிருந்து கட்டண விலக்குத் தவறாகக் கோரும் பட்சத்தில், அவருடைய விண்ணப்பம் நிராகரிக்கப்படும்

4 விண்ணப்பதாரர் தேர்வுக்கட்டணவிலக்கு தொடர்பான இலவச சலுகையைப் பெறுவதற்கு "ஆம்" அல்லது "இல்லை" என்ற விருப்பங்களை கவனமாகதேர்வு செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறார்.

5 விண்ணப்பதாரர், விண்ணப்பதாரர்களின் தன்விவரப்பக்கத்தின் Application History-ல் தோன்றும் தகவல்களைப் பொருட்படுத்தாமல் தேர்வுக்கட்டணச் சலுகை இதுவரை எத்தனை முறைபயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை தங்களின் சொந்த நலன்கருதி கணக்கிட்டு வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்.

6 கட்டணச்சலுகை கோரி விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பமானது (விண்ணப்பிக்கப்பட்ட பதவிகளைப் பொருட்படுத்தாமல்) விண்ணப்பதாரர்களுக்கு அனுமதிக்கப்பட்ட மொத்த இலவச வாய்ப்புகளின் எண்ணிக்கையிலிருந்து ஒருவாய்ப்பு குறைக்கப்பட்டதாகக் கருதப்படும்.

7 அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச இலவச வாய்ப்புகளை பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரர் / தேர்வுக்கட்டணச்சலுகையை பெறவிரும்பாத

**விண்ணப்பதாரர் / தேர்வுக்கட்டணச் சலுகைக்கு தகுதியற்ற விண்ணப்பதாரர் தேர்வுக்கட்டணச் சலுகை தொடர்பான கேள்விக்கு எதிராக "இல்லை" என்ற விருப்பத்தினை தெரிவு செய்யவேண்டும். அவ்விண்ணப்பதாரர் நிர்ணயிக்கப்பட்ட தேர்வுக்கட்டணம் செலுத்தும்முறை மூலம் தேவையான கட்டணத்தினை பின்னர் செலுத்தலாம்.**

8 **விண்ணப்பதாரர் நிர்ணயிக்கப்பட்ட தேர்வுக்கட்டணத்துடன் குறித்தநேரத்திற்குள் விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கவில்லையென்றால், *உரிய வழிமுறைகளைப் பின்பற்றிய பிறகு* விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.** (**விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள் பத்தி 6ஐ க்காண்க**).

## 7.தேர்வுக் கட்டணம் செலுத்தும் முறை

- **தேர்வுக் கட்டணம் ரூ.200/- ஐ (ரூபாய் இருநூறு மட்டும்) இணையவழியில் (இணைய வங்கி, பற்று அட்டை, கடன் அட்டை) *விண்ணப்பிக்க நிர்ணயிக்கப்பட்ட இறுதி நாளிற்குள்செலுத்த வேண்டும்.***
- **விண்ணப்பதாரர்கள் சேவைக் கட்டணமும் சேர்த்து செலுத்த வேண்டும்.**
- **விண்ணப்பதாரர்களின் கட்டணச் சலுகைக்கான தகுதியின் அடிப்படையில்தான் தேர்வுக்கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு பெற முடியும்.**
- **இணையவழியில் தேர்வுக் கட்டணம் செலுத்தாமல், நேரடியாக செலுத்தும் வரைவு காசோலை / அஞ்சலக காசோலை போன்றவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.**
- **நிரந்தர பதிவு செய்யும் முறையில் பதிவு செய்து பதிவுக் கட்டணமாக ரூ.150 செலுத்தி பதிவு ஐடி பெற்றவர்கள் நிரந்தர பதிவுக் கட்டணத்தைச் (அதாவது ரூ.150/-) செலுத்தத் தேவையில்லை, தேர்வுக் கட்டணம் செலுத்தினால் போதும்.**
- **தேர்வுக் கட்டணச் சலுகை கோரும் விண்ணப்பதாரர்களைத் தவிர ஏற்கனவே நிரந்தர பதிவு செய்த விண்ணப்பதாரர்கள் இப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட தேர்வுக் கட்டணத்தை செலுத்த வேண்டும். நிரந்தரப் பதிவு முறையில் பதிவு செய்துள்ள விண்ணப்பதாரர்கள் நிரந்தர பதிவு முறையில் பதிவு செய்த நாளிலிருந்து 5 வருட காலத்திற்கு பதிவுக் கட்டணம் செலுத்துவதற்கு மட்டும் விலக்கு அளிக்கப்படும்.**

  **இந்த நிரந்தரப் பதிவு இப்பதவிக்குரிய தேர்வுக் கட்டணமாக கருதப்படமாட்டாது.**

**(தேர்வு கட்டணம் தொடர்பாக "விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகளில்" பத்தி -2(V) ஐ காண்க).**

## 8. சலுகைகள்

**(i) ஆதிதிராவிடர், ஆதிதிராவிடர் (அருந்ததியர்), பட்டியல் பழங்குடியினர், *மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர்*, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினர், ஆதரவற்ற விதவை, முன்னாள் இராணுவத்தினர், *நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகள்***

மற்றும் பிற வகையினைச் சார்ந்தவர்களுக்கான வயது / தகுதி மற்றும் கட்டணச் சலுகைகள் குறித்த விவரங்கள் "விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள்" பத்தி 3(D),5 & 6 ஐக் காண்க.

(ii) மேலே குறிப்பிடப்பட்டுள்ள சலுகையை கோரும் விண்ணப்பதாரர்கள் அதற்குரிய ஆதாரங்களை இணையவழி விண்ணப்பத்துடன் இணைத்துபதிவேற்றம் செய்ய வேண்டும் .பதிவேற்றம் செய்ய தவறினால் *உரிய வழிமுறைகளைப் பின்பற்றிய பிறகு* விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

குறிப்பு:

முன்னாள் இராணுவத்தினர், ஏதேனும் ஒரு பிரிவு / பணியில் அடங்கிய பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டால், பின்னர், வேறு எந்த நியமன நிகழ்வுகளிலும் முன்னாள் இராணுவத்தினர் என்ற சலுகையை கோர முடியாது. (தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி முறைமைகள் சட்டம் 2016 பிரிவு 3(j)ல் குறிப்பிட்டுள்ளவாறு)

**9.தேர்வுத்திட்டம்:கொள்குறி வகை (கணினி வழித் தேர்வு) மற்றும் நேர்முகத் தேர்வு:-**

| பாடம்<br>கணினி வழித் தேர்வு | கால அளவு | அதிகபட்ச மதிப்பெண்கள் | தெரிவிற்குத் தகுதி பெற குறைந்தபட்ச மதிப்பெண்கள் | |
|---|---|---|---|---|
| | | | ஆ.தி., ஆ.தி(அ), ப.ப., மி.பி.வ./சீம., பி.வ.( மு.தவிர) மற்றும்பி.வ.(மு) | "ஏனையோர்" |
| **தாள் 1(கொள்குறி வகை)(பாடத் தாள்)**<br>சுருக்கெழுத்து (ஆங்கிலம்)<br>பட்டயப்படிப்புத்தரம்<br>100 **வினாக்கள் (150 மதிப்பெண்கள்)**<br>(**குறியீட்டு எண்.** 378 )<br>(அல்லது)<br>சுருக்கெழுத்து (தமிழ் )<br>பட்டயப்படிப்புத்தரம்<br>100 **வினாக்கள் (150 மதிப்பெண்கள்)**<br>(**குறியீட்டு எண்.** 383) | 1 1/2 மணி நேரம் | 150 | 102 | 136 |
| **தாள் II(கொள்குறி வகை)**<br>**பகுதி -அ**<br>கட்டாய தமிழ்மொழி தகுதித் தேர்வு(10ம் வகுப்புத் தரம்)<br>(100 வினாக்கள்/ 150 மதிப்பெண்கள்) | 3 மணி நேரம் | குறிப்பு:<br>பகுதி 'அ'விற்கான குறைந்தபட்ச மதிப்பெண்கள் - 60 (150ல் 40%) . தாள் -II ன் பகுதி 'அ'வில் பெறும் மதிப்பெண்கள் தர நிர்ணயத்திற்கு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. | | |
| **பகுதி-ஆ**<br>பொது அறிவு (100 வினாக்கள்)<br>குறியீட்டு எண்.003<br>(பொது அறிவு பட்டப்படிப்புத் தரம்) 75 வினாக்கள்<br>திறனாய்வுத் தேர்வு (10ம் வகுப்புத் தரம்)<br>(25 வினாக்கள்) | | 150 | | |
| நேர்முகத் தேர்வு மற்றும் ஆவணங்கள் | | 40 | | |
| மொத்தம் | | 340 | | |

குறிப்பு:

(i) தாள்-II-இல் பகுதி 'அ'-வில் குறைந்தபட்ச மதிப்பெண் பெறாத தேர்வர்களின் தாள் I மற்றும் தாள் II இல் பகுதி 'ஆ'வின் விடைத்தாட்கள் மதிப்பீடு செய்யப்படமாட்டாது.

(ii) தாள் -I மற்றும் தாள் II இல் பகுதி 'ஆ'வில் பெறும் மதிப்பெண்கள் மட்டும் தர நிர்ணயத்திற்கு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

(iii) தாள் I - பாடத்தாள் (சுருக்கெழுத்து ஆங்கிலம் & சுருக்கெழுத்து தமிழ்) ற்கான வினாத்தாள் அந்தெந்த மொழிகளில் அமைக்கப்படும். தாள்II பகுதி – ஆ விற்கான வினாத்தாள் மட்டும் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் அமைக்கப்படும்

(iv) ஆங்கிலம் சுருக்கெழுத்து மற்றும் தமிழ் சுருக்கெழுத்து இரண்டையும் முடித்தவர்கள் இரண்டு தேர்வுகளையும் எழுத வேண்டியதில்லை. இரண்டு பாடங்களில், அவர்கள் விரும்பும் ஒரு பாடத்தை எழுதலாம். அவர்கள் எழுத்துத் தேர்வில் தெரிவிற்குத் தேவையான மதிப்பெண்களைப் பெற்றால், அவர்கள் ஆங்கில நிருபர் மற்றும் தமிழ் நிருபர் ஆகிய இரண்டு பதவிகளுக்கும் தகுதியானவர்களாகக் கருதப்படுவர்.

(v) விண்ணப்பதாரர் கணினிவழித் தேர்வின் அனைத்து தாள்களிலும் கலந்துகொள்ள வேண்டும். விண்ணப்பதாரர் ஏதேனும் ஒரு தாளில் கலந்துகொள்ளவில்லையெனில் அவர் கலந்துகொண்ட இதர தாள் மதிப்பீடு செய்யப்படமாட்டாது.

(vi) விண்ணப்பதாரரின் ஏதேனும் ஒரு தாள் மதிப்பீட்டிற்கு தகுதியற்றதாக கருதப்பட்டால் அவ்விண்ணப்பதாரரின் இதர தாளும் மதிப்பீடு செய்யப்படமாட்டாது.

(vii) தேர்வாணையத்தால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளுக்கு (கணினி வழித் தேர்வு) ஆஜராகும்போது பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்து விண்ணப்பதாரர்களின் விதிமுறையில் பத்தி 17ஐ காண்க.

(viii) மேற்குறிப்பிட்ட பாடங்களுக்கான பாடத்திட்டம் இவ்வறிக்கையின் பிற்சேர்க்கை I-ல் உள்ளது.

(ix) **கணினி வழி இணைய தேர்வு முறைக்கான சிறப்பு விதிமுறைகள்**

1) **விண்ணப்பதாரர்கள் அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட தேர்வு மையத்தில் மட்டுமே தேர்வு எழுத வேண்டும். தேர்வு மையத்தினை மாற்றம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரர்கள் நுழைவுச் சீட்டினை தேர்வு மையத்திற்குக் கொண்டு சென்று காண்பிக்க வேண்டும். விண்ணப்பதாரர்கள் பயனாளர் குறியீடு மற்றும் கடவுச்சொல்லைப் பயன்படுத்தி கணினியில் புகுபதிகை செய்ய வேண்டும். திரையில் தோன்றும் அனைத்து அறிவுரைகளும் கவனமாகப் படிக்கவும்.**

2) **விண்ணப்பதார்கள் மின்னணு மற்றும் தகவல் தொடர்பு சாதனங்களை தேர்வு அறைக்குள் கொண்டு செல்ல அனுமதியில்லை. அதனால் மின்னணு சாதனங்களை எடுத்து வர வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறார்கள்.**

3) **கணினி வழித் தேர்வு என்பது தாளின் மீது எழுதுகோல் கொண்டு விடையை நிரப்பும் தேர்வு போன்றதே.**

4) **கணினி வழித் தேர்வில், ஐந்து விடைகள் திரையில் தோன்றும்.**

5) விண்ணப்பதாரர்கள் சுட்டியைப் பயன்படுத்தி சரியான விடையினை தேர்ந்தெடுத்து கேள்விகளுக்கு பதிலளிக்கலாம்.

6) விண்ணப்பதார் ஒவ்வொருவருக்கும், வழிமுறைகளுக்காக பயன்படுத்தும் பொருட்டு தனித்தாள் (Rough Sheet) வழங்கப்படும். தேர்வு முடிவுற்ற பின் தனித்தாள் திரும்பப் பெறப்பட்டுவிடும்.

7) விண்ணப்பதாரர்கள் உரிய விடையினை சொடுக்க வேண்டும். விண்ணப்பதாரர்கள், 'next' என்ற பொத்தானை சொடுக்குவதன் மூலம் அடுத்த கேள்விக்கு செல்லலாம் அல்லது 'previous' என்ற பொத்தானை சொடுக்குவதன் மூலம் முன்புள்ள கேள்விக்கு செல்லலாம்.

8) விண்ணப்பதாரர்கள் எந்த கேள்வியினையும் பார்வையிடலாம். தேர்வு முடியும் நேரத்திற்கு முன் எப்போது வேண்டுமானாலும் விடையினை மாற்றலாம். அவர்கள் விரும்பினால், சில கேள்விகளுக்கு விடையளிக்காமல் அடுத்த கேள்விக்கும் செல்ல முடியும்.

9) ஒவ்வொரு விண்ணப்பதாரரின் திரையிலும், கேள்விகள் மற்றும் விடைகளின் வரிசை மாற்றம் செய்யப்பட்டிருக்கும்.

10) விண்ணப்பதாரர்கள் தேர்வு நேரத்திற்குள், எப்பொழுது வேண்டுமானாலும் தங்களது விடையினை சமர்ப்பிக்கலாம்.

11) விடையினை சமர்ப்பித்த பிறகு தேர்வினை தொடர முடியாது.

12) விண்ணப்பதாரர்கள் தங்கள் விடையினை சமர்ப்பிக்க தவறும்பட்சத்தில், தேர்வு முடியும் தருவாயில் தானாகவே விடைகள் சமர்ப்பிக்கப்பட்டுவிடும்.

13) கணினி வழித் தேர்விற்கு, சுட்டியினை எவ்வாறு பயன்படுத்துவது என்று தெரிந்தாலே போதுமானது. கணினியறிவு அவசியமில்லை.

14) பார்வைக் குறைபாடுள்ளவர்கள், கேள்வி மற்றும் விடைகளை தேவைக்கேற்ப எழுத்து வடிவங்களை பெரிதாக்க முடியும். விண்ணப்பதார்கள் தங்களது அடையாளத்தை உறுதி செய்ய, வருகைத்தாளில் கையொப்பமிட்டு பெருவிரல் ரேகையினைப் பதிவு செய்ய வேண்டும். சுட்டியின் அனைத்து செயல்பாடுகளும் சேவையகத்தில் சேமிக்கப்பட்டு. பின்னாளில் பார்வையிடுவதற்கிணங்க, கோப்பு உருவாக்கப்படும். தேர்வறை புகைப்படக் கருவி மூலம் கண்காணிக்கப்படும். தேர்வாணைய இணையதளம் (www.tnpsc.gov.in)-ல் உள்ள மாதிரி தேர்வினை பழகுவதன் மூலம், கணினி வழித் தேர்வில், சுட்டியைக் கையாளும் முறையினை அறிந்துகொள்ளலாம். மாதிரி தேர்வு என்பது, தேர்வு நாளன்று நடைபெறும் கணினி வழியில் நடைபெறும் இணைய தேர்வு போன்றது. மாதிரி தேர்வில் படிப்படியான அனைத்து விவரங்களும் அளிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதார்கள் மாதிரி தேர்வினை எத்தனை முறை வேண்டுமானாலும் பழகிக் கொள்ளலாம்.

15) **விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அல்லது அனுமதிச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பாடத்தினை அல்லாமல் வேறு பாடத்தாள் மாற்றி எழுதும் விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.**

- **கணினி வழித் தேர்வு சம்மந்தமாக கூடுதல் தகவல் பிற்சேர்க்கை IV-ல் உள்ளது.**

**10. தெரிவுசெய்யும் முறை**

**தெரிவு இரண்டு நிலைகளை உடையது. 1. கணினி வழித் தேர்வு 2. நேர்காணல் தேர்வு அமைந்த வாய்மொழித் தேர்வு. இறுதி தெரிவானது விண்ணப்பதாரர்கள் கணினி வழித் தேர்விலும், வாய்மொழித் தேர்விலும் சேர்த்து பெற்ற மொத்த மதிப்பெண்கள் பணியிட ஒதுக்கீட்டு விதி ஆகியவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். விண்ணப்பதாரர் கணினி வழித் தேர்வின் அனைத்து பாடங்களிலும் வாய்மொழித் தேர்விலும் கலந்துகொள்வது கட்டாயமாகும். கணினி வழித் தேர்வின் ஏதேனும் ஒரு பாடத்தில் தேர்வு எழுதாத (எழுத தவறி இருந்தாலும்) விண்ணப்பதாரர் அத்தெரிவிற்கான குறைந்தபட்ச மதிப்பெண்களை பெற்றிருந்தாலும் கூட தெரிவு செய்யப்பட தகுதியானவராக கருதப்படமாட்டார். "விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள்" பத்தி 18(B) ஐக் காண்க.**

**11. தேர்வு மையங்கள்**

**கணினி வழித் தேர்வு சென்னை (0101) தேர்வு மையத்தில் மட்டுமே நடைபெறும்.**

**குறிப்பு:**

**விண்ணப்பதாரர்கள் கணினி வழித் தேர்வு எழுதுவதற்கும், சான்றிதழ் சரிபார்ப்புக்கும், நேர்முகத் தேர்விற்கும் ,கலந்தாய்விற்கும் தங்களது சொந்த செலவில் வரவேண்டும்.**

**12. அ) பணி விவரங்கள்**

**விண்ணப்பதாரர், இணைய வழியில் விண்ணப்பிக்கும்போது, இந்திய அரசின் அல்லது இந்தியாவில் உள்ள ஒரு மாநில அரசின் பணியில் அல்லது உள்ளாட்சி அமைப்புகள் அல்லது பல்கலைக்கழகங்கள் அல்லது இந்திய அரசின் அல்லது இந்தியாவிலுள்ள ஒரு மாநில அரசின் அதிகாரத்தின் கீழ் அமைக்கப்பட்டிருக்கும் அரசு சார்புள்ள நிறுவனங்கள் அல்லது பொதுத்துறை நிறுவனங்களில் நிரந்தரப் பணியில் அல்லது தற்காலிகப் பணியில் இருப்பின், தங்களது பணி குறித்த விவரத்தினை தேர்வாணையத்திற்கு தெரிவித்தல் வேண்டும்.விண்ணப்பதாரர், பணி குறித்த உண்மையை மறைக்கும் பட்சத்தில், அவரது விண்ணப்பம் *உரிய வழிமுறைகளைப் பின்பற்றிய பிறகு* நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரர், தெரிவாகும் பட்சத்தில் விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள் பத்தி 14 (p)-ல் குறிப்பிட்டுள்ளவாறு தடையின்மைச் சான்றிதழை சமர்பிக்க வேண்டும்.**

**ஆ) குற்றவியல் வழக்குகள் /ஒழுங்கு நடவடிக்கைகள் தொடர்பான உறுதிமொழி**

**(i) இணைய வழி விண்ணப்பத்தில் தன்மீதான நிலுவையிலுள்ள குற்றவியல் / ஒழுங்கு நடவடிக்கைகள் பற்றி தெரிவித்துள்ள விண்ணப்பதாரர்கள், அது தொடர்பான முதல் தகவல் அறிக்கையின் நகலை / குற்றக் குறிப்பாணையின் நகலை**

(நேர்வுக்கேற்ப) கண்டிப்பாக இணைய வழி விண்ணப்பத்துடன் இணைத்துபதிவேற்றம் செய்யவேண்டும். மேற்கண்ட ஆவணங்களை பதிவேற்றம் செய்யதவறும் பட்சத்தில் விண்ணப்பம் *உரிய நடைமுறைகளுக்குப் பின்னர்* நிராகரிக்கப்படும்.

(ii) விண்ணப்பதாரர்கள், தங்கள் மீதான குற்றவியல் நடவடிக்கைகளில் குற்றத் தீர்ப்பு / ஒழுங்கு நடவடிக்கைகளில் தண்டனை விதிக்கப்பட்டது தொடர்பாக தங்களது இணைய வழி விண்ணப்பத்தில் தெரிவிப்பதுடன், தொடர்புடைய நீதிமன்ற ஆணை அல்லது ஒழுங்கு நடவடிக்கையிலிருந்து விடுவிக்கப்பட்ட ஆணையினைஇணைய வழி விண்ணப்பத்துடன் இணைத்து பதிவேற்றம் செய்யவேண்டும். மேற்குறிப்பிட்ட ஆவணங்ளை பதிவேற்றம் செய்ய தவறும் பட்சத்தில் *உரிய வழிமுறைகளைப் பின்பற்றிய பிறகு* விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

(iii) தடையின்மைச் சான்றிதழைசமர்ப்பித்த பிறகோ அல்லது இணைய வழி விண்ணப்பத்தினைசமர்ப்பித்த பிறகோ, நியமனம் தொடர்பான பணிகள் முழுமையாக நிறைவடைவதற்கு முன் வரை உள்ள தெரிவு பணிகளின் எந்த ஒரு நிலையின் போதும் விண்ணப்பதாரர் மீது, ஏதேனும் குற்றவியல் வழக்கு பதியப்பட்டிருந்தாலோ / ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தாலோ, அவர் குற்றத்தீர்ப்பு / தண்டனை ஏதும் பெற்றிருந்தாலோ, தேர்வாணையத்தால் ஆவணங்களைப் பதிவேற்றம் / சமர்ப்பிக்கக் கோரும் நிலையில், விண்ணப்பதாரர்கள் அது குறித்த உண்மைவிவரங்களை, தேர்வாணையத்திற்குத் தெரிவித்தல் வேண்டும். மேலும், இந்த அறிவுரையினை கடைபிடிக்கத் தவறினால் அத்தகைய விண்ணப்பதாரர்களுடைய விண்ணப்பம் தேர்வாணையத்தால் *உரிய வழிமுறைகளைப் பின்பற்றிய பிறகு* விண்ணப்பம் நிராகரிக்கப்படும், ஓராண்டுக்கு தேர்வு எழுதுவதிலிருந்து விலக்கி வைக்கப்படுவர்.

(விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள் 14(S) & 2W உள்ளவாறு )

<u>மேற்கூறிய அறிவுறுத்தலில் ஏதேனும் விதி மீறப்பட்டால் அவர்களது விண்ணப்பம் உரிய வழிமுறைகளைப் பின்பற்றிய பிறகு நிராகரிக்கப்படும்.</u>

## 13.பொதுவான தகவல்கள்

A) இட ஒதுக்கீடு விதி இத்தெரிவிற்கு பொருந்தும்.

B) (i)தமிழ்வழிக்கல்விமூலம் படித்தநபர்களுக்கு, மாநிலத்தின் கீழ் உள்ள பணிகளில் முன்னுரிமை அடிப்படையில் நியமனம் செய்யும் (திருத்த) சட்டம் 2020-ன் பிரிவு 2 (d)-ல் சொல்லப்படுவதாவது: தமிழ்வழியில் படித்தநபர் என்றால், மாநிலத்தில் நேரடி நியமனத்தின் வாயிலாக நிரப்பப்படும் பதவிகளுக்கான சிறப்புவிதிகளில் பரிந்துரைக்கப்பட்ட கல்வித்தகுதிவரை தமிழ்வழியில் படித்தவராவார்.

(ii) தமிழ்வழியில் கல்வி பயின்றதற்கான உரிமை கோரும் விண்ணப்பதாரர்கள், அதற்கான சான்றாவணமாக, பத்தாம்வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்பு மாற்றுச்சான்றிதழ் / தற்காலிகச்சான்றிதழ் /பட்டச்சான்றிதழ் / மதிப்பெண்பட்டியல் / நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதியினை விண்ணப்பதாரர் தமிழ்வழியில் பயின்றுள்ளார் என பதிவுசெய்யப்பட்டு, குழுமம் அல்லது பல்கலைக்கழகம் அல்லது கல்வி நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட பட்டச்சான்றிதழ் / பட்டமேற்படிப்புச் சான்றிதழினை இணையவழி விண்ணப்பத்துடன் இணைத்து பதிவேற்றம் செய்யவேண்டும்.

(iii) விண்ணப்பதாரர்கள், நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதிவரைக்கும் அனைத்துக் கல்வித்தகுதியினையும் தமிழ்வழியில் பயின்றுள்ளார் என்பதற்கு ஆதாரமான சான்றுகளை கட்டாயம் இணைய வழி விண்ணப்பத்துடன் இணைத்து பதிவேற்றம் செய்ய வேண்டும்.

**<u>உதாரணம்</u>:-**

**ஒரு பதவிக்கு பட்ட படிப்பு நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதியாக இருப்பின், விண்ணப்பதாரர் ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம்வகுப்பு, மேல்நிலைக்கல்வி, பட்டப்படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பினை கட்டாயம் தமிழ்வழியில் பயின்றிருக்க வேண்டும்.**

(iv) **தமிழ்வழியில்கல்வி பயின்றதற்கான சான்றாவணம் எதுவும் இல்லையெனில், கல்விநிறுவனத்தின் முதல்வர் / தலைமையாசிரியர் / மாவட்டக்கல்வி அலுவலர் / முதன்மைக்கல்வி அலுவலர்/ மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் / பதிவாளர்/ தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலர் /கல்விநிறுவனத்தின் தலைவர் / இயக்குநர் / தொழில்நுட்ப கல்வி இயக்குநர் /இணை இயக்குநர் / பல்கலைகழகங்களின் பதிவாளரிடமிருந்து விண்ணப்பதாரர்களின் விதிமுறைகளில் குறிப்பிட்டுள்ள படிவத்தில், நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதி வரையிலான ஒவ்வொரு கல்வித்தகுதிக்கும் சான்றிதழைப்பெற்று இணைய வழி விண்ணப்பத்துடன் இணைத்து பதிவேற்றம் செய்ய வேண்டும்.**

(v) **நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதிவரையிலான அனைத்து கல்வித்தகுதிகளையும் தமிழ்வழிக்கல்வியில் பயின்றுள்ளார் என்பதற்கான ஆதாரச்சான்றினை இணைய வழி விண்ணப்பத்துடன் இணைத்து பதிவேற்றம் செய்ய தவறும்பட்சத்தில் விண்ணப்பம் *உரிய நடைமுறைகளுக்கு பின்னர்* நிராகரிக்கப்படும்.**

(vi) **ஏதேனும் ஒரு பாடத்தை பகுதி நேரமாக படித்ததற்காகவோ / ஏதேனும் தேர்வினை தனித்தேர்வராக எழுதியதற்காகவோ, தனியர் தமிழ்வழிக் கல்வியில் பயின்றுள்ளார் என சான்றாவணம் ஏதேனும் சமர்ப்பித்தால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன் *உரிய வழிமுறைகளைப் பின்பற்றிய பிறகு* விண்ணப்பம் நிராகரிக்கப்படும். (மேலும் விவரங்களுக்கு "விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகளில் உள்ள பத்தி 14(R) & 2W ஐக்" காண்க)**

C) **இப்பதவிக்குரிய தெரிவு தொடர்பாக, சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் ஏதேனும் வழக்குகள் நிலுவையில் இருப்பின், அவற்றின் மீதான இறுதி ஆணைகளுக்குட்பட்டு தற்காலிகமாக தெரிவு செய்யப்படும்.**

D) **தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி முறைமைகள்) சட்டம் 2016, பிரிவு 26 மற்றும் 27(இ)-ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆதரவற்ற விதவை மற்றும் முன்னாள் இராணுவத்தினருக்கான இடஒதுக்கீடு இப்பதவிக்கு பொருந்தாது.**

E) **<u>நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகள் :-</u>**

***அரசாணை (நிலை) எண்.20, மாற்றுத்திறனாளிகள் நலத்(DAP3-2) துறை, நாள் 20.06.2018-ன் படி இப்பதவி கீழ்க்காணும் நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளுக்கு பொருந்தும்.*** கை.கா.இ.கு, தொ.நோ.கு, கு.த, அ.வீபா.

[ கை.கா.இ.கு – கை கால் இயக்கக் குறைபாடு; தொ.நோ.கு – தொழுநோயிலிருந்து குணமடைந்தோர், கு.த – குள்ளத்தன்மை, அ.வீபா- அமில வீச்சினால் பாதிக்கப்பட்டோர்]

F) ***நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகள், மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் விதி, 2017-ல் (மாற்றுத் திறனாளிகளுக்கு அதிகாரமளித்தல் துறை (Divyangjan), சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம், இந்திய அரசு) குறிப்பிடப்பட்டுள்ளபடிவத்தில் அரசாணை (நிலை) எண்.28, மாற்றுத்திறனாளிகள் (DAP.3.1) நலத்துறை, நாள் 27.07.2018-ல், வரையறுக்கப்பட்டுள்ள சான்றிதழ் வழங்கக் கூடிய தகுதி வாய்ந்த அலுவலரிடமிருந்து பெறப்பட்ட மாற்றுத்திறனாளிச் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.***

G) **நேரடி நியமனம் மூலம் நிரப்பப்படும் காலிப்பணியிடங்களில் குறைந்தபட்சம்** 30% **பெண்களுக்காக ஒதுக்கீட்டில் தெரிவு செய்யப்பட தேர்ச்சியும், தகுதியும் வாய்ந்த போதிய பெண் விண்ணப்பதாரர்கள் கிடைக்கப் பெறாவிடில், அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்கள் அதே வகுப்பினரை சார்ந்த தகுதிவாய்ந்த ஆண் விண்ணப்பதாரர்களைக் கொண்டு நிரப்பப்படும்.** (***தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள்*** (***பணி முறைமைகள்***) ***சட்டம்*** 2016, ***பிரிவு*** 26(5)-***ல் குறிப்பிட்டுள்ளவாறு***).

H) **ஆதிதிராவிட** (**அருந்ததியர்**) **வகுப்பினர் முன்னுரிமை அடிப்படையில் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் நிரப்பப்பட்ட பிறகும், அவ்வகுப்பினர்களில் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் இருப்பின் அவ்விண்ணப்பதாரர்கள், ஆதிதிராவிட வகுப்பினர்களுக்காக ஒதுக்கப்பட்ட இடஒதுக்கீட்டிற்கும் மதிப்பெண் தரவரிசைப்படி நிரப்பப்படுவர். அருந்ததியர்களுக்கென ஒதுக்கப்பட்ட பணியிடங்களுக்கு தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்கள் கிடைக்கப்பெறாவிடில், அப்பணியிடங்கள் பிற ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்தவர்களைக் கொண்டு நிரப்பப்படும்.** (***தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள்*** (***பணி முறைமைகள்***) ***சட்டம்*** 2016, ***பிரிவு*** 27***ல் குறிப்பிட்டுள்ளவாறு***).

I) **இணையவழி விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்ட உரிமை கோரல்களுக்கான ஆவணச் சான்றுகளை இணையவழி விண்ணப்பத்துடன் இணைத்து பதிவேற்றம் செய்ய வேண்டும். விண்ணப்பத்தில் தெரிவிக்கப்படாமல் பின்னர் கோரப்படும் எந்தவொரு மாற்றமும், கோரிக்கையும் ஏற்றுக் கொள்ளப்படாது. குறிப்பிட்ட காலநேரத்திற்குள் ஆவணங்களை பதிவேற்ற தவறினால்** ***உரிய நடைமுறைகளுக்குப் பின்னர்*** **விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.**

J) **கீழ்க்காணும் உண்மைகளை மறைக்கும்பட்சத்தில் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பம்** ***உரிய வழிமுறைகளைப் பின்பற்றிய பிறகு*** **நிராகரிக்கப்படும் மற்றும் விண்ணப்பதாரர்கள் தேர்வாணையத்தால் நிரந்தரமாகவோ அல்லது தக்கதென கருதப்படும் காலம் வரையில் விலக்கிவைக்கப்படுவர்.**

. (i) **அரசு அல்லது மத்திய மாநில அரசின் கீழ் உள்ள நிறுவனங்கள், உள்ளாட்சி மன்றங்கள், பொதுத் துறை நிறுவனங்கள், சட்டத்தின் வாயிலாக நிறுவப்பட்ட நிறுவனங்கள், அரசுத் துறை கழகங்கள், பல்கலைக்கழகங்கள் முதலியவற்றில் முறையாகவோ/ தற்காலிகமாகவோ பணிபுரிந்து வருவது / பணிபுரிந்தது.** (ii) **குற்றவியல் நிகழ்வுகள், கைதானது, குற்றங்களுக்கான தண்டனை பெற்றது.** (iii) **மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் / மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையங்களினால் தேர்வு எழுதும் உரிமை இரத்து செய்யப்பட்டது அல்லது தகுதியற்றவராக அறிவிக்கப்பட்டது.**

K) **கைது செய்யப்பட்டிருத்தல், குற்றத்தீர்ப்பு வழங்கப்பட்டிருத்தல், வேலைக்கு ஆட்கள் தெரிவு செய்யும் ஏதேனும் ஒரு முகமையினால் தடை / தகுதியின்மை செய்யப்பட்டிருத்தல்,**

**குற்ற நடவடிக்கை** (**அல்லது**) **ஏதேனும் ஒழுங்கு நடவடிக்கை தொடங்கப்பட்டிருத்தல்/ முடிவுற்றிருத்தல், ஆகியவற்றுடன் தொடர்புடைய சரியான மற்றும் உண்மையான தகவல்களை, விண்ணப்பத்தில் தெரிவிப்பதுடன், தீர்ப்பின் அசல் / ஆணை / அரசாணை/ துறை நடவடிக்கை கைவிடப்பட்ட அரசாணை அல்லது இதர ஆவணங்களை**

இணையவழி விண்ணப்பத்துடன் இணைத்து பதிவேற்றம் செய்ய வேண்டும். மேற்குறிப்பிடப்பட்ட நிகழ்வுகள் விண்ணப்பம் சமர்ப்பித்த பின்னர், நியமனம் பெறும் காலம் வரை எப்போது ஏற்பட்டிருப்பினும் உடனடியாக தேர்வாணையத்திற்கு தெரிவிக்கப்பட வேண்டும். தவறினால், தகுந்த தண்டனைக்குரிய நடவடிக்கையை தேர்வாணையம் எடுக்கும்.. விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள் பத்தி 12 ஐக் காண்க).

L) இடஒதுக்கீடு குறித்த தவறான தகவல்கள்/ தகுதிக்கான காரணிகளான வயது, பாலினம், வகுப்பு பிரிவுகள், கல்வித் தகுதி, பயிற்று மொழி, உடற் தகுதி போன்ற அடிப்படைத் தகுதிகள் குறித்த தவறான தகவல் கொண்ட விண்ணப்பங்களும் முழுமையாக நிரப்பப்படாத விண்ணப்பங்களும் *உரிய வழிமுறைகளைப் பின்பற்றிய பிறகு* நிராகரிக்கப்படும்.

M) நிரந்தரப்பதிவு என்பது எந்தவொரு பதவி/ நியமனத்துக்கான விண்ணப்பமாக கருதப்பட மாட்டாது. விண்ணப்பதாரர்களால் நிரந்தரப்பதிவில் பொதுவான தகவல்கள் அளிக்கப்பட்டிருப்பினும் இந்தத் தேர்வுக்குரிய விண்ணப்பத்தில் அளிக்கப்படும் விவரங்கள் / தகவல்கள் மட்டுமே இத்தேர்வுக்கு பரிசீலிக்கப்படும். இந்த நியமனத்திற்கான இணையவழி விண்ணப்பத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தேவையான விவரங்கள் / தகவல்கள் தவறானதாக அல்லது முழுமை பெறாதவையாக இருந்தால் அதற்கு தேர்வாணையம் பொறுப்பாகாது.

N) திருநங்கைகளின் பாலினத்தவரின் வகுப்பு நிர்ணயம் குறித்து அரசாணை நிலை எண்.90, சமூக நலம் மற்றும் சத்துணவுத் [sw8(2)] துறை, நாள். 22.12.2017 -இல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>திருநங்கைகளின் வகுப்பு நிர்ணயம்:-</u>

i) எந்த ஒரு சாதிச் சான்றிதழும் இல்லாத திருநங்கை விண்ணப்பதாரர்கள் தங்களது இணையவழி விண்ணப்பத்தில் அரசாணை (நிலை) எண். 28, பிற்படுத்தப்பட்டவகுப்பினர், மிகவும்பிற்படுத்தப்பட்டவகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 06.04.2015-ன்படி, மிகவும் பிற்படுத்தப்பட்டவகுப்பினர் பிரிவினையோ அல்லது ஏனையோர் பிரிவினையோ தேர்வுசெய்துகொள்ளலாம்.

ii) சாதிச்சான்றிதழ் வைத்துள்ள ஆதிதிராவிடர் / ஆதிதிராவிட (அருந்ததியர்) / பழங்குடியினர் வகுப்பினைச் சார்ந்த திருநங்கை விண்ணப்பதாரர், அவர்களது சமூகத்தினைச் சார்ந்தவர்களாகவே கருதப்படுவர்.

iii) ஆதிதிராவிடர் / ஆதிதிராவிட (அருந்ததியர்) / பழங்குடியினர் வகுப்பைத்தவிர மற்ற வகுப்பினைச்சார்ந்த மற்றும் அப்பிரிவின் அடிப்படையில் சாதிச்சான்றிதழ்பெற்றுள்ள திருநங்கை விண்ணப்பதாரர், அவருடைய வகுப்பு (class) அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு ஆகிய இரண்டு வகுப்புகளில், அவருக்கு சாதகமாக தோன்றுகின்ற ஒன்றை, ஒருமுறைப்பதிவின்போதே தேர்வு செய்யவேண்டும். அதன்பிறகு, வகுப்பை எப்பொழுதும் மாற்ற இயலாது.

[விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள் பத்தி 14F(vi)-(xi) ஐக் காண்க]

<u>o) வேலைவாய்ப்பில் திருநங்கை விண்ணப்பதாரர்களுக்கான இட ஒதுக்கீடு:-</u>

1. திருநங்கை விண்ணப்பதார்களின் பெண் என தன்னை அடையாளப்படுத்திக்கொள்ளும் விண்ணப்பதாரர் பெண்களுக்கான 30 சதவிகிதம் மற்றும் பொதுப்பிரிவினருக்கான 70 சதவிகிதம் (ஆண் மற்றும் பெண்) ஆகிய இரண்டு இட ஒதுக்கீட்டின் கீழும் கருதப்படுவர்.

2. **திருநங்கை விண்ணப்பதாரர்களின் "ஆண்" அல்லது "மூன்றாம் பாலினத்தவர்" என தன்னை அடையாளப்படுத்திகொள்ளும் விண்ணப்பதாரர் பொதுப்பிரிவினருக்கான 70 சதவிகிதம் இட ஒதுக்கீட்டின் கீழ் (ஆண் மற்றும் பெண்) கருதப்படுவர்.**

**தமிழ்நாடு திருநங்கைகள் நல வாரியத்தில் இருந்து பெறப்பட்ட திருநங்கைகள், திருநங்கை ஆண் /திருநங்கை பெண் சான்றிதழ் கொண்ட விண்ணப்பதாரர்களுக்கு மட்டுமே மேற்குறிப்பிட்ட இட ஒதுக்கீடு பொருந்தும்.**

**14) <u>ஏனைய முக்கிய அறிவுரைகள்</u>**

**அ )விண்ணப்பதாரர்கள் தேர்விற்கான தங்களுடைய தகுதிகளை உறுதி செய்தல்**

**தேர்விற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் தரப்பட்டுள்ள அறிவுரைகளை நன்கு படித்த பின்னர் தாங்கள் அத்தேர்விற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளனரா என உறுதி செய்து கொள்ள வேண்டும். கணினி வழித் தேர்வு / சான்றிதழ்சரிபார்ப்பு / நேர்முகத்தேர்வு/ கலந்தாய்விற்கு அனுமதிக்கப்படுவது அல்லது தெரிவுசெய்யப்பட்டோர் பட்டியலில் தற்காலிகமாக விண்ணப்பதாரரின் பெயர் சேர்க்கப்படுவதால்மட்டுமே, ஒருவிண்ணப்பதாரர் பதவி நியமனம் பெற உரிமை அளிக்கப்பட்டவராகமாட்டார். எனவே, விண்ணப்பதாரரின்விண்ணப்பம், எல்லா நிலைகளிலும் தற்காலிகமானது மற்றும் விண்ணப்பதாரரால் அளிக்கப்பட்ட விவரங்கள் தவறு என்றாலோ தேர்வாணைய அறிவுரைகள் அல்லது விதிகள் மீறப்பட்டுள்ளன என்று கண்டறியப்படும் பட்சத்தில், எந்நிலையிலும், தெரிந்தெடுக்கப்பட்ட பின்னர் கூட, விண்ணப்பத்தை *உரிய வழிமுறைகளைப் பின்பற்றிய பிறகு* நிராகரிக்கும் உரிமை தேர்வாணையத்திற்கு உண்டு.**
**[விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள்" பத்தி -11(B) (C) & (D) -ல் உள்ளவாறு].**

**ஆ) தகுதியுள்ள விண்ணப்பதாரருக்கு, தேர்வு எழுதுவதற்கான அனுமதிச்சீட்டுகள், www.tnpscexams.in / *www.tnpsc.gov.in* என்ற தேர்வாணைய இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும். விண்ணப்பதாரர் அவற்றை பதிவிறக்கம் செய்து கொள்ளவேண்டும். அனுமதிச்சீட்டு தனியாக அஞ்சல் மூலம் அனுப்பப்பட மாட்டாது. விண்ணப்பதாரர் தேர்வின் பொழுது அனுமதிச்சீட்டில் கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு நிபந்தனையையும் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும். [விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள்" பத்தி -2 (V) (g) -ல் உள்ளவாறு].**

**இ) தெளிவுரை வேண்டுவோர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய அலுவலகத்தினை நேரில் அல்லது 1800 4190958 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணின் மூலம், அனைத்து வேலை நாட்களிலும் முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 5.45 மணி வரைதொடர்பு கொள்ளலாம். ஒரு முறைப் பதிவு மற்றும் இணையவழி விண்ணப்பம் குறித்த சந்தேகங்களுக்கு helpdesk@tnpscexams.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் இதர சந்தேகங்களுக்கு grievance.tnpsc@tn.gov.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பலாம். [விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள்" பத்தி -2(V)-ல் குறிப்பு (h)(i)(j) ல் உள்ளவாறு].**

**ஈ) விண்ணப்பதாரர்களுக்கான தகவல் பரிமாற்றம்: சான்றிதழ் சரிபார்ப்பு/ வாய்மொழித் தேர்வு / கலந்தாய்விற்கான நாள் மற்றும் நேரம் குறித்த தகவல்கள் ஏதும் விண்ணப்பதாரர்களுக்கு அஞ்சல் மூலமாக அனுப்பப்படமாட்டாது. இது குறித்த தகவல்கள் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்படும். மேற்கூறிய தகவல் விண்ணப்பதாரர்களுக்கு குறுஞ்செய்தி/ மின்னஞ்சல் ஆகியவற்றின் மூலம் மட்டுமே விண்ணப்பதாரர்களுக்கு தெரிவிக்கப்படும். குறுஞ்செய்தி/ மின்னஞ்சல் ஏதேனும்**

காரணங்களினால் சென்றடையாமல் / கிடைக்கப்பெறாமல் இருப்பின் அதற்கு தேர்வாணையம் பொறுப்பாகாது.

உ) விளம்பர அறிவிக்கை வெளியிடப்பட்ட பின் தெரிவு பணிகள் முழுவதுமாக முடிவுறாமல் தகவல் அறியும் உரிமைச் சட்டம், முதலமைச்சரின் தனிப்பிரிவு மூலம் பெறப்படும் மனுக்கள் மற்றும் குறைதீர் மையம் ஆகியவற்றின் கீழ் எவ்வித தகவலும் வழங்கப்படமாட்டாது.

<u>ஊ) கைப்பேசி மற்றும் இதர மின்னணு சாதனங்களுக்குத் தடை:</u>

1) விண்ணப்பதாரர்கள் தேர்வுக் கூடத்திற்குள் அனுமதிக்கப்பட்ட எழுது பொருட்களான கருப்பு பந்துமுனை பேனா தவிர, மின்னணு சாதனங்களான தரவி (Blue Tooth) கைப்பேசி, நினைவூட்டு உள்கட்டமைப்புக் குறிப்புகள் அடங்கிய கைக்கடிகாரங்கள் மற்றும் மோதிரம் அல்லது ஏனைய மின்னணு சாதனங்கள், மின்னணு அல்லாத பதிவுக்கருவிகள், புத்தகங்கள், குறிப்புகள், கைப்பை வண்ண எழுது கோல், பென்சில், தனித் தாள்கள், கணித மற்றும் வரைப்படக் கருவிகள், மடக்கை அட்டவணை, படியெடுக்கப்பட்ட வரைபடம், காட்சி வில்லைகள், பாடப்புத்தகங்கள் மற்றும் பொதுக் குறிப்புத் தாட்கள் மற்றும் பதிவுசெய்யும் தனிக்கருவிகளாகவோ மோதிரம் அல்லது கைக்கடிகாரத்தின் இணைப்பாகவோ கொண்டுவரக் கூடாது.

2) அவ்வாறான பொருட்களை வைத்திருப்போர் காணப்பட்டால் அவர்கள் தொடர்ந்து தேர்வு எழுத அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும், அவர்களது விடைத்தாள் செல்லாததாக்கப்படுவதுடன் தேர்வு எழுதுவதிலிருந்து விலக்கியும் வைக்கப்படுவர். தேவைப்படின், அவ்விடத்திலேயே முழுச் சோதனைக்கு உட்படுத்தப்படுவர்.

3) விண்ணப்பதாரர்கள் தங்கள் கைப்பேசி உள்ளிட்ட தடைசெய்யப்பட்ட பொருட்களை தேர்வுக்கூடத்திற்கு கொண்டுவர வேண்டாம் என அறிவுறுத்தப்படுவதுடன், அப்பொருட்களின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் தர இயலாது எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

(மேலும் விவரங்களுக்கு "விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள் 17(E) ஐக் காண்க)

எ) தேர்வுக்கு விண்ணப்பிப்பவர்கள் அத்தேர்விற்கு அனுமதிக்கப்பட அனைத்து தகுதிகளையும் பெற்றவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர்களால் தெரிவிக்கப்பட்டுள்ள தகவல்களை தேர்வாணையம் ஐயமறத் தெரிந்து கொள்ளும்வரை அவர்களின் விண்ணப்பங்கள் கணினி வழித் தேர்விற்கு (அதாவது எல்லா நிலைகளிலும்) தற்காலிகமாக ஏற்கப்பட்டுள்ளதாகவே கருதப்படும். விண்ணப்பதாரர் தேர்விற்கு முன்போ அல்லது பின்னரோ நியமனத்திற்கு போட்டியிடத் தகுதியற்றவர் என்று தேர்வாணையத்தால் கண்டறியப்பட்டால், எந்நிலையிலும், அதாவது தெரிந்தெடுக்கப்பட்ட பின்னர் கூட விண்ணப்பத்தை *உரிய வழிமுறைகளைப் பின்பற்றிய பிறகு* நிராகரிக்கும் உரிமை உண்டு.

ஏ) தெரிவிக்கப்பட்டுள்ள தகவல்கள் தவறு எனக் கண்டறியப்பட்டால், *உரிய வழிமுறைகளைப் பின்பற்றிய பிறகு* விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் அவ்விண்ணப்பதாரர்கள் மீது தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளவும் நேரிடும்.

ஐ) ஒழுங்கீனச் செயல்களுக்குத் தடை:

தேர்வு எழுதும் அறையில் மற்ற விண்ணப்பதாரர்களுடைய விடையை பார்த்து எழுதுதல்/ பார்த்து எழுத அனுமதித்தல் அல்லது வேறு ஏதேனும் முறையற்ற

உதவிகளைப் பெறவோ அல்லது பெற முயற்சிக்கவோ அல்லது அத்தகைய முறையற்ற உதவிகளைத் தரவோ அல்லது தர முயற்சிக்கவோ கூடாது.

ஒ) தேர்வுக் கூடத்தில் நடந்து கொள்ளும் முறை:

தேர்வு எழுதும் எந்த ஒரு விண்ணப்பதாரரும் தேர்வுக் கூடத்தில் தவறான நடவடிக்கையிலோ (அல்லது) தேர்வினை சீர்குலைக்கும் நோக்கத்திலோ (அல்லது) தேர்வாணையத்தால் தேர்வினை நடத்த பணியில் அமர்த்தப்பட்டுள்ள அலுவலர் / பணியாளர்களை தாக்கும் முயற்சியிலோ ஈடுபடக்கூடாது. அவ்வாறு ஈடுபடும் விண்ணப்பதாரர்களின் செயல்கள் கடுமையான தவறாக கருதப்பட்டு, அவ்விண்ணப்பதாரர்கள் தண்டனைக்கு உட்படுத்தப்படுவர்.

ஓ) விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகளை மீறும் பட்சத்தில் விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள் பத்தி 17(E) ன்படி அல்லது தேர்வாணையம் பொருத்தமானதெனக் கருதும் தண்டனை விதிக்கப்படும்.

ஔ) கொள்குறி வகைத் தேர்விற்கான உத்தேச விடைகள் தேர்வு நடைபெற்ற நாளிலிருந்து 6 வேலை நாட்களுக்குள் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்படும். தேர்வாணையத்தால் வெளியிடப்படும் கொள்குறிவகைத் தேர்விற்கான உத்தேச விடைகள் தொடர்பாக முறையீடு செய்ய வேண்டுமானால் தேர்வாணைய இணையதளத்தில் உள்ள Answer Key Challenge என்ற சாளரத்தைப் பயன்படுத்தி முறையீடு செய்யலாம் (Result->Answer keys)

விண்ணப்பதாரர்கள் கொள்குறிவகைத் தேர்விற்கான உத்தேச விடைகள் தேர்வாணையத்தால் வெளியிடப்பட்ட 7 நாட்களுக்குள் இணையவழி வாயிலாக மட்டுமே முறையீடு செய்யவேண்டும். அஞ்சல் வழியாகவோ அல்லது மின்னஞ்சல் வழியாகவோ பெறப்படும் முறையீடுகள் ஏற்கப்படமாட்டாது.

உத்தேச விடைகளை முறையீடு செய்வதற்கான அறிவுரைகள் மற்றும் வழிமுறைகள் தேர்வாணைய இணையதளத்திலேயே வழங்கப்பட்டுள்ளது. மேலும் முறையீடு செய்ய இணையவழி மூலமாகவோ அல்லது வேறுவழியாகவோ வழங்கப்பட்டுள்ள கால அவகாசம் முடிவுற்ற நிலையில் பெறப்படும் எவ்வித முறையீடுகளும் பரிசீலிக்கப்படமாட்டாது.

இணையவழியில் உத்தேச விடைகளை முறையீடு செய்வதற்கு உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வேண்டுகோளானது ஒவ்வொரு பாடத்திற்கென வல்லுநர்களை கொண்ட குழுவிற்கு பரிந்துரைக்கப்படும். மேலும், வல்லுநர் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், இறுதியான விடைகள் முடிவு செய்யப்பட்டு அதன்பின்னர் விடைகள் மதிப்பீடு செய்யும் பணியானது தொடங்கப்படும்.

தெரிவுப் பணிகள் முடிவடையும் வரை இறுதியான விடைகளை தேர்வாணையம் வெளியிடாது.

தேர்வு நடைமுறைகள் முழுவதும் நிறைவடைந்த பின்னர், அத்தேர்வுக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரர் அனைவருடைய விவரங்களும் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்படும்.

[மேலும் விவரங்களுக்கு - விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள் பத்தி (17(D)(IV) - (XII)ஐக் காண்க)

15. விண்ணப்பிக்கும் முறை

1. விண்ணப்பதாரர்கள் www.tnpsc.gov.in / www.tnpscexams.in ஆகிய தேர்வாணையத்தின் இணையதளங்கள் மூலம் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.

2. எந்தவொரு பதவிக்கும் விண்ணப்பிக்கும் முன்பு ஆதார் எண் மூலம் ஒருமுறைப்பதிவு எனப்படும் நிரந்தரப்பதிவு (OTR) மற்றும் தன்விவரப்பக்கம் (Dashboard) ஆகியன கட்டாயமாகும். விண்ணப்பதாரர்கள் நிரந்தர பதிவு மூலம் பதிவுக்கட்டணமாக ரூ.150/- ஐ செலுத்தி, பதிவு செய்து கொள்ள வேண்டும். ஒருமுறைப்பதிவு, பதிவு செய்த நாள் முதல் ஐந்தாண்டுகள் வரை நடைமுறையிலிருக்கும், தங்களுக்குரிய ஒரு முறைப் பதிவு கணக்கு (One Time Registration ID) மற்றும் கடவுச் சொல் மூலமாக மட்டுமே விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

3. ஒருமுறைப்பதிவில் பதிவேற்றம்செய்ய, விண்ணப்பதாரர்கள் தங்களது புகைப்படம், கையொப்பம் ஆகியவற்றை CD/DVD/Pen drive போன்ற ஏதேனும் ஒன்றில் பதிவு செய்து தயாராக வைத்திருக்க வேண்டும்.

4. ஒரு விண்ணப்பதாரர் ஒன்றுக்கும் மேற்பட்ட ஒருமுறைப் பதிவுக் கணக்கை (One Time Registration ID) உருவாக்க அனுமதியில்லை.

5. விண்ணப்பதாரர்கள் தங்களுக்குரிய தனித்துவமான பதிவுக்கணக்கு மற்றும் கடவுச்சொல்லைப் பயன்படுத்தி ஏற்கனவே பதிவிட்ட தங்களது விவரங்களை பார்வையிடவும், புதுப்பிக்கவும் செய்யலாம். தங்களது ஒருமுறைப் பதிவு , கடவு சொல்லினை வேறு நபரிடமோ (அ) முகவர்களிடமோ பகிர்ந்து கொள்ள கூடாது.

6. ஒருமுறைப்பதிவு என்பது எந்தவொரு பதவிக்கான விண்ணப்பம் அல்ல. இது விண்ணப்பதாரர்களின் விவரங்களைப் பெற்று அவர்களுக்கு தன்விவரப் பக்கம் ஒன்றினை உருவாக்க மட்டுமே பயன்படும். எந்தவொரு பதவிக்கும் விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள், அறிவிக்கையில் "Apply" என்ற உள்ளீடு வழியே நிரந்தரப்பதிவுக்குரிய பயனாளர் குறியீடு மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றை உள்ளீடு செய்து விண்ணப்பிக்க வேண்டும்.

7. விண்ணப்பதாரர்கள் தாங்கள் விண்ணப்பிக்க விரும்பும் பதவியின் பெயரை தெரிவு செய்ய வேண்டும்.

8. புகைப்படம், குறிப்பிட்ட ஆவணங்கள் மற்றும் கையொப்பம் இல்லாமல் பதிவேற்றம் செய்யப்படும் இணையவழி விண்ணப்பம் *உரிய வழிமுறைகளைப் பின்பற்றிய பிறகு* நிராகரிக்கப்படும்.

9. இணையவழி விண்ணப்பத்தில் அளித்துள்ள தகவல்களை, விண்ணப்பதாரர் அவ்விணையவழி விண்ணப்பங்களை சமர்பிக்க

நிர்ணயிக்கப்பட்டுள்ள கடைசி நாள் வரை திருத்தம் செய்து கொள்ள அனுமதிக்கப்படுவர். இணையவழி விண்ணப்பத்தினை சமர்பிப்பதற்கான கடைசி நாளுக்குப் பின்னர், விண்ணப்பத்தில் விண்ணப்பதாரரால் சமர்பிக்கப்பட்டுள்ள தகவல்களை திருத்தம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

(மேலும் விவரங்களுக்கு " விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள் பத்தி 2W ஐக் காண்க)

10. **இணையவழி விண்ணப்பத்தை திருத்தம் செய்தல்-**

இணையவழி விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கான இறுதி தேதிக்குப் பிறகு, அறிவிக்கையின் பத்தி 4-ல் (முக்கியமான தேதி மற்றும் நேரம்) குறிப்பிட்டுள்ளபடி, இணைவழி விண்ணப்பத் திருத்த காலத்தில் விண்ணப்பதாரர்கள் தங்களது இணைவழி விண்ணப்பத்தை திருத்தம் செய்ய அனுமதிக்கப்படுவர். திருத்தம் செய்தல் காலத்தின் இறுதி தேதிக்குப் பிறகு, இணையவழி விண்ணப்பத்தில் எந்த மாற்றமும் செய்ய அனுமதிக்கப்படமாட்டாது. விண்ணப்பதாரர்கள் தாங்கள் இறுதியாக அளித்துள்ள விவரங்களின்படி விண்ணப்பங்கள் செயலாக்கப்படும். இது விண்ணப்பதாரர்களின் பொறுப்பாகும். மேலும் இணையவழி விண்ணப்பத்தில் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட விவரங்களைத் திருத்தியதால் ஏற்படும் விண்ணப்பம் நிராகரிப்பிற்கு தேர்வாணையம் பொறுப்பாகாது.எந்தவொரு முறையிலும் இணையவழி விண்ணப்பத்தில் உள்ள உரிமைகோரல்களை மாற்றியமைப்பதற்காக தேர்வாணையத்திற்கு அனுப்பப்படும் கோரிக்கைகள் /மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

11. **அச்சிடுதலில் விருப்பதேர்வு**

அ) விண்ணப்பத்தை இணைய வழியில் அனுப்பியபின், விண்ணப்பதாரர்கள் PDF முறையில் தங்கள் விண்ணப்பத்தை அச்சிட / சேமிக்க முடியும்.

ஆ) விண்ணப்பதாரர்களுக்கு விண்ணப்ப நகல் தேவைப்பட்டால், பயனாளர் குறியீடு மற்றும் கடவுச் சொல்லை பயன்படுத்தி அச்சிட்டுக் கொள்ளலாம் /பதிவிறக்கமும் செய்து கொள்ளலாம்.

இ) இணையதள விண்ணப்ப அச்சுப்படி (PRINT) அல்லது வேறு எந்தவிதமான ஆதார ஆவணங்களையும் தேர்வாணையத்திற்கு அனுப்ப வேண்டாம்.

(விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள்" பத்தி -2-ல் உள்ளவாறு)

## 16. ஆவணங்கள் பதிவேற்றம்

**1. இந்தப் பதவிக்கான விண்ணப்பத்தைப் பொறுத்தவரை, விண்ணப்பதாரர்கள் இணைய வழி விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும்போது சான்றிதழ்கள் / ஆவணங்களை இணைய வழி விண்ணப்பத்தில் வழங்கப்பட்ட அனைத்து உரிமை கோரல்களுக்கும் / விவரங்களுக்கும் ஆதரவாக கட்டாயமாக பதிவேற்றம் செய்யாமல், இணையவழி விண்ணப்பத்தை சமர்ப்பிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்.**

**விண்ணப்பதாரர்களால் பதிவேற்றம் செய்த சான்றிதழ்களை தங்கள் ஒரு முறைப் பதிவின் மூலமாக சரிபார்க்கும் விருப்பம் உள்ளது. ஏதேனும் சான்றிதழ்கள் தவறாகப் பதிவேற்றப்பட்டாலோ அல்லது பதிவேற்றம் செய்யப்படாவிட்டாலோ அல்லது ஆவணங்களைப் பதிவேற்றுவதில் ஏதேனும் மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமாயின் விண்ணப்பதாரர்கள், குறிப்பிட்ட பதவிக்கான நுழைவுச் சீட்டு வழங்கும் நாளுக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு வரை / கணினி வழித் தேர்வு நடைபெறுவதற்கு பன்னிரெண்டு நாட்களுக்கு முன்பு வரை ஆவணங்களைத் திருத்த மற்றும் பதிவேற்றம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள்.**

**(மேலும் விவரங்களுக்கு " விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள் பத்தி 2W ஐக் காண்க)**

**2. விண்ணப்பதாரர்களுக்கான தகவல்- சான்றிதழ் சரிபார்ப்பு, நேர்காணல் மற்றும் கலந்தாய்வு தொடர்பான தேதி மற்றும் நேரம் போன்ற தனிப்பட்ட தகவல்கள் விண்ணப்பதாரர்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படமாட்டாது. அவ்விவரங்கள் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்படும்.இருப்பினும் விண்ணப்பதாரர்களின் பதிவு செய்யப்பட்ட அலைபேசி எண் / மின்னஞ்சலிற்கு சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் நேர்காணல் ஆகியவற்றிற்கான தேதி மற்றும் நேரத்தை வழங்க தேர்வாணையம் கூடுதல் வசதியை செய்கிறது. அனைத்து புதுப்பிக்கப்பட்டவிவரங்கள்/ தகவல்களுக்கு தேர்வாணைய இணையதளத்தை அவ்வப்போது பார்வையிடுமாறு விண்ணப்பதாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். தொழிநுட்ப சிக்கல்கள் உள்ளிட்ட காரணங்களால் விண்ணப்பதாரர்களுக்கு குறுஞ்செய்தி/மின்னஞ்சல் சென்றடைவதில்/பெறுவதில்சிக்கல் / தாமதம் ஏற்பட்டால் (தவறினாலும்) தேர்வாணையம் அதற்கு பொறுப்பாகாது. குறுஞ்செய்தி அல்லது மின்னஞ்சல் பெறாத விண்ணப்பதாரர்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகள் ஏற்கப்படமாட்டாது.**

**17. விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள்**

**இணையவழி விண்ணப்பத்தை 12.10.2022 அன்று இரவு 11.59 மணி வரை திருத்த /விண்ணப்பிக்க இயலும். பின்னர் அச்சேவை நிறுத்தப்படும். இணையவழி விண்ணப்பத்தை 17.10.2022 -நள்ளிரவு 12.01 மணி முதல் 19.10.2022 இரவு 11.59 மணி வரை திருத்தம் செய்யலாம். இணைய வழி விண்ணப்பத்துடன் இணைத்து பதிவேற்றம் செய்த ஆவணங்கள் / சான்றிதழ்கள் மாற்ற / பதிவேற்ற / மீள்பதிவேற்றம் செய்ய 09.12..2022 அன்று இரவு 11.59 மணி வரை அனுமதிக்கப்படுவர். பின்னர் அச்சேவை நிறுத்தப்படும்.**

***(மேலும் கூடுதல் தகவல்களுக்கு தேர்வாணையத்தின் "விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகளை" தேர்வாணையத்தின் இணையதள முகவரியான www.tnpsc.gov.in-ல் காணலாம்)***

## மறுப்பு (DISCLAIMER)

**இணைக்கல்வி தகுதிக்கான அரசாணைகள்** *தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இணையதளத்தில் உள்ளன.* **எனினும், விண்ணப்பதாரர்கள் இத்தேர்விற்கு விண்ணப்பிக்கும் போது இணைக்கல்வி தகுதிக்கான அரசாணைகள் இத்தேர்விற்கான விளம்பர அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளிலோ அல்லது அதற்கு முன்போ இணைக்கல்வி ஏதேனும் இருப்பின் அது குறித்த தகவலை விண்ணப்பத்தில் தெரிவித்தும், மேலும் சான்றிதழ்கள் பதிவேற்றம் செய்யும் போது அவ்வரசாணைகளையும் சேர்த்து இணைய வழி விண்ணப்பத்துடன் இணைத்து பதிவேற்றம் செய்ய வேண்டும். இவ்வாறு செய்யத் தவறினால் விண்ணப்பதாரரின் விண்ணப்பம் உரிய வழிமுறைகளைப் பின்பற்றிய பிறகுநிராகரிக்கப்படும். இத்தேர்வின் விளம்பர அறிவிக்கை நாளிற்கு பின்பு வெளியிடப்பட்ட இணைக்கல்வி தகுதிக்கான அரசாணைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**

**செயலாளர்**

**பிற்ச்சேர்க்கை-I** **தாள்-I**

# கணினி வழித் தேர்விற்கான பாடத்திட்டம்

## STENOGRAPHY (ENGLISH) - DIPLOMA STANDARD

**SUBJECT CODE : 378**

**UNIT I**

1. Importance of Stenography
2. Consonants
3. Grammalogues
4. Phraseography
5. Circles and Loops
6. Initial and Final Hooks

**UNIT II**

1. Compound Consonants
2. The Halving Principle
3. The Doubling Principle
4. Medial Semicircle

**UNIT III**

1. Prefixes and Negative words
2. Suffixes and Terminations
3. Contractions
4. Special Contractions

**UNIT IV**

1. Advanced Phraseography
2. Intersections
3. Usage of Political Phrases
4. Usage of Legal Phrases

**UNIT V**

1. Note-taking and Transcription
2. Legislature Reporting
3. Techniques for improving Speed

**தாள்-I**

**சுருக்கெழுத்து- பாடத்திட்டம்**

**டிப்ளமோ நிலை**

**பாடக் குறியீடு:383**

அலகு 1

1. சுருக்கெழுத்தின் முக்கியத்துவம்
2. மெய்யெழுத்துக்கள்
3. தனிகுறிச் சொற்கள்
4. சொற்றொடரியல்
5. வட்டங்கள் மற்றும் சுழிகள்
6. ஆரம்ப மற்றும் இறுதி கொக்கிகள்

அலகு 2

1. கூட்டு மெய்கள்
2. பாதியாக்கும் முறை
3. இரட்டிப்பு முறை
4. நடு அரைவட்டம்

அலகு 3

1. முன்னொட்டுகள் மற்றும் எதிர்மறை சொற்கள்
2. பின்னொட்டுகள் மற்றும் இறுதி வார்த்தைகள்
3. சுருக்கங்கள்
4. சிறப்புச் சுருக்கங்கள்

அலகு 4

1. மேம்பட்ட சொற்றொடரியல்
2. வெட்டும் முறை
3. அரசியல் சொற்றொடர்களின் பயன்பாடு
4. சட்ட சொற்றொடர்களின் பயன்பாடு

அலகு 5

1. குறிப்பெடுத்தல் மற்றும் விரிவாக்கம் செய்தல்
2. சட்டமன்றம் – குறிப்பெடுத்தல்
3. வேகத்தை மேம்படுத்துவதற்கான நுட்பங்கள்

## தாள்-II

## கணினி வழித் தேர்விற்கான பாடத்திட்டம்

## பகுதி-அ

## கட்டாய தமிழ்மொழி தகுதித்தேர்விற்கான பாடத்திட்டம்

## (கொள்குறி வினாவிற்கான தலைப்புகள்)

## பத்தாம் வகுப்புதரம்

1. பிரித்தெழுதுதல் / சேர்த்தெழுதுதல்.
2. எதிர்ச்சொல்லை எடுத்தெழுதுதல்.
3. பொருந்தா ச்சொல்லைக் கண்டறிதல்.
4. பிழை திருத்தம் (i) சந்திப்பிழையை நீக்குதல் ( ii) மரபுப் பிழைகள், வழுவுச் சொற்களை நீக்குதல் / பிறமொழிச் சொற்களை நீக்குதல்.
5. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை அறிதல்.
6. ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான பொருளையறிதல்.
7. ஒரு பொருள் தரும் பல சொற்கள்.
8. வேர்ச்சொல்லைத் தேர்வு செய்தல்.
9. வேர்ச்சொல்லைக் கொடுத்து / வினைமுற்று, வினையெச்சம், வினையாலணையும் பெயர், தொழிற்பெயரை / உருவாக்கல்.
10. அகர வரிசைப்படிசொற்களை சீர் செய்தல்.
11. சொற்களை ஒழுங்குப்படுத்தி சொற்றொடராக்குதல்.
12. இருவினைகளின் பொருள் வேறுபாடு அறிதல்.
    (எ.கா.) குவிந்து-குவித்து
13. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுத்தல்.
14. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுதல் - தன்வினை, பிறவினை, செய்வினை, செயப்பாட்டு வினை வாக்கியங்களைக் கண்டெழுதுதல்.
15. உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெழுதுதல்
16. அலுவல்சார்ந்தசொற்கள் (கலைச்சொல்)
17. விடைவகைகள்.
18. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைக் கண்டறிதல் (எ.கா.) கோல்டுபிஸ்கட் - தங்கக்கட்டி.
19. ஊர்ப் பெயர்களின் மரூஉவை எழுதுக (எ.கா.) தஞ்சாவூர் - தஞ்சை
20. நிறுத்தற்குறிகளை அறிதல்.

21. **பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு (வாரான் - வருகிறான்).**
22. **சொற்களை இணைத்து புதிய சொல் உருவாக்கல்.**
23. **பொருத்தமான காலம் அமைத்தல்**
    **(இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்).**
24. **சரியான வினாச் சொல்லைத் தேர்ந்தெடு.**
25. **சரியான இணைப்புச் சொல்**
    **(எனவே, ஏனெனில், ஆகையால், அதனால், அதுபோல).**
26. **அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க.**
27. **இருபொருள் தருக.**
28. **குறில் - நெடில் மாற்றம், பொருள் வேறுபாடு.**
29. **கூற்று, காரணம் - சரியா? தவறா?**
30. **கலைச்சொற்களைஅறிதல் :-**
    **எ.கா.** - Artificial Intelligence - **செயற்கை நுண்ணறிவு**
    Super Computer - **மீத்திறன் கணினி**
31. **பொருத்தமான பொருளைத் தெரிவு செய்தல்**
32. **சொற்களின் கூட்டுப் பெயர்கள் (எ.கா.) புல் -புற்கள்**
33. **சரியான தொடரைத் தேர்ந்தெடுத்தல்**
34. **பிழை திருத்துதல் (ஒரு-ஓர்)**
35. **சொல் - பொருள் - பொருத்துக**
36. **ஒருமை-பன்மை பிழை**
37. **பத்தியிலிருந்து வினாவிற்கான சரியான விடையைத் தேர்ந்தெடு.**

# தாள்-II

## பகுதி- ஆ

## SYLLABUS FOR WRITTEN EXAMINATION

## GENERAL STUDIES (DEGREE STANDARD)

**CODE NO.003**

### UNIT-I: GENERAL SCIENCE

**(i)** Scientific Knowledge and Scientific Temper - Power of Reasoning - Rote Learning vs Conceptual Learning - Science as a tool to understand the past, present and future.

**(ii)** Nature of Universe - General Scientific Laws – Mechanics - Properties of Matter, Force, Motion and Energy - Everyday application of the Basic Principles of Mechanics, Electricity andMagnetism, Light, Sound, Heat, Nuclear Physics, Laser, Electronics and Communications.

**(iii)** Elements and Compounds, Acids, Bases, Salts, Petroleum Products, Fertilisers, Pesticides.

**(iv)** Main concepts of Life Science, Classification of Living Organisms, Evolution, Genetics, Physiology, Nutrition, Health and Hygiene, Human Diseases.

**(v)** Environment and Ecology.

### UNIT-II: CURRENT EVENTS

**(i)** History-Latest diary of events-National symbols-Profile of States-Eminent personalitiesand places in news–Sports-Books and authors.

**(ii)** Polity – Politicalparties and political system in India-Public awareness and General administration- Welfare oriented Government schemes and their utility, Problems in Public Delivery Systems.

**(iii)** Geography-Geographical landmarks.

**(iv)** Economics-Current socio-economic issues.

**(v)** Science-Latest inventions in Science andTechnology.

**(vi)** Prominent Personalities in various spheres – Arts, Science, Literature and Philosophy.

**UNIT-III: GEOGRAPHY OF INDIA**

**(i)** Location – Physical features - Monsoon, Rainfall, Weather and Climate- Water Resources - Rivers in India-Soil, Minerals and Natural Resources- Forest and Wildlife - Agricultural pattern.

**(ii)** Transport -Communication.

**(iii)** Social Geography – Population density and distribution- Racial, Linguistic Groups and Major Tribes.

**(iv)** Natural calamity – Disaster Management – Environmental pollution: Reasons and preventive measures – Climate change – Green energy.

**UNIT–IV: HISTORY AND CULTURE OF INDIA**

**(i)** Indus Valley Civilization - Guptas, Delhi Sultans, Mughals and Marathas- Age of Vijayanagaram and Bahmani Kingdoms-South Indian History.

**(ii)** Change and Continuity in the Socio-Cultural History of India.

**(iii)** Characteristics of Indian Culture, Unity in Diversity –Race, Language, Custom.

**(iv)** India as a Secular State, Social Harmony.

**UNIT-V: INDIAN POLITY**

**(i)** Constitution of India-Preamble to the Constitution- Salient features of the Constitution- Union, State and Union Territory.

**(ii)** Citizenship, Fundamental Rights, Fundamental Duties, Directive Principles of State Policy.

**(iii)** Union Executive, Union Legislature – State Executive, State Legislature – Local Governments, Panchayat Raj.

**(iv)** Spirit of Federalism: Centre-State Relationships.

**(v)** Election - Judiciary in India – Rule of Law.

**(vi)** Corruption in Public Life– Anti-corruption measures – Lokpal and LokAyukta - Right to Information- Empowerment of Women-Consumer Protection Forums, Human Rights Charter.

## UNIT-VI: INDIAN ECONOMY

**(i)** Nature of Indian Economy –Fiveyear plan models-an assessment – Planning Commission andNitiAyog.

**(ii)** Sources of revenue – Reserve Bank of India – Fiscal Policy and Monetary Policy - Finance Commission–Resource sharing between Union and State Governments - Goods and Services Tax.

**(iii)** Structure of Indian Economy and Employment Generation,Land Reforms and Agriculture-Application of Science and Technology in Agriculture-Industrial growth-Rural Welfare Oriented Programmes – Social Problems – Population, Education, Health, Employment, Poverty.

## UNIT-VII: INDIAN NATIONAL MOVEMENT

**(i)** National Renaissance –Early uprising against British rule - Indian National Congress - Emergence of leaders –B.R.Ambedkar, Bhagat Singh, Bharathiar, V.O.ChidambaranarJawaharlal Nehru,Kamarajar, Mahatma Gandhi, MaulanaAbulKalam Azad,ThanthaiPeriyar, Rajaji, Subash Chandra Bose, Rabindranath Tagoreand others.

**(ii)** Different modes of Agitation: Growth of Satyagraha and Militant Movements.

**(iii)** Communalism and Partition.

## UNIT-VIII: History, Culture, Heritage and Socio-Political Movements in Tamil Nadu

**(i)** History of Tamil Society, related Archaeological discoveries,Tamil Literature from Sangam Age till contemporary times.

**(ii)** Thirukkural :
(a) Significance as a Secular Literature
(b) Relevance to Everyday Life
(c) Impact of Thirukkural on Humanity
(d) Thirukkural and Universal Values - Equality, Humanism, etc
(e) Relevance to Socio-Politico-Economic affairs
(f) Philosophical content in Thirukkural

**(iii)** Role of Tamil Nadu in freedom struggle - Early agitations against British Rule - Role of women in freedom struggle.

**(iv)** Evolution of 19$^{th}$and 20$^{th}$Century Socio-Political Movements in Tamil Nadu - Justice Party, Growth of Rationalism - Self Respect Movement, Dravidian MovementandPrinciples underlying both these Movements, Contributions of ThanthaiPeriyar and Perarignar Anna.

## UNIT–IX: Development Administration in Tamil Nadu

**(i)** Human Development Indicators in Tamil Nadu and a comparative assessment across the Country – Impact of Social Reform Movements in the Socio-Economic Development of Tamil Nadu.

**(ii)** Political parties and Welfare schemes for various sections of people – Rationale behind Reservation Policy and access to Social Resources - Economic trends in Tamil Nadu – Role and impact of social welfare schemes in the Socio-Economic Development of Tamil Nadu.

**(iii)** Social Justice and Social Harmony as the Cornerstones of Socio-Economic Development.

**(iv)** Education and Health Systems in Tamil Nadu.

**(v)** Geography of Tamil Nadu and its impact on Economic growth.

**(vi)** Achievements of Tamil Nadu in various fields.

**(vii)** e-Governance in Tamil Nadu.

## UNIT-X: APTITUDE AND MENTAL ABILITY

**(i)** Simplification – Percentage - Highest Common Factor (HCF) - Lowest Common Multiple (LCM).

**(ii)** Ratio and Proportion.

**(iii)** Simple interest - Compound interest - Area - Volume - Time and Work.

**(iv)** Logical Reasoning - Puzzles-Dice - Visual Reasoning - Alpha numericReasoning – Number Series.

# பிற்சேர்க்கை - II

## LIST OF DOCUMENTS TO BE SCANNED AND UPLOADED ALONG WITH THE ONLINE APPLICATION

**(Size of each document should be less than 200 KB in PDF format (Single page or Multiple page)**

| | |
|---|---|
| 1. | SSLC Mark Sheet |
| 2. | HSC Mark Sheet or its equivalent. |
| 3. | Educational qualification:<br>Diploma Certificate /U.G. Degree Certificate / P.G. Degree Certificate /IPG Degree Certificate / Consolidated Mark Sheet<br>Note:<br>If the issue date of provisional certificate / Degree Certificate falls after the date of notification (i.e 13.09.2022) candidates should upload evidence for having acquired the prescribed qualification on or before the date of Notification, failing which their applications will be rejected after due process. |
| 4. | Senior Grade Type Writing Certificate ( English / Tamil) |
| 5. | Shorthand High Speed Certificate ( English / Tamil) |
| 6. | G.O. for Equivalence of qualification to the prescribed qualification (if applicable) |
| 7. | PSTM Certificate up to prescribed educational qualification of entire duration. (if applicable) |
| 8. | Community Certificate |
| 9. | Differently Abled Certificate (if applicable) |
| 10. | Ex-Servicemen Certificate (if applicable) |
| 11. | Destitute Widow Certificate (if applicable) |
| 12. | Transgender ID Card (if applicable) |
| 13. | Gazetted copy for name change (if applicable) |
| 14. | No Objection Certificate (if applicable) |
| 15. | Documents / Court Orders proving Acquittal / Conviction or FIR in case of pending cases for Criminal cases registered (if applicable) |
| 16. | Other documents (if any) |

**For further details refer para 2W of "Instructions to Applicants"**

# பிற்சேர்க்கை - III

CERTIFICATE OF PHYSICAL FITNESS BY A SINGLE MEDICAL OFFICER
THE CIVIL MEDICAL BOARD

Signature of Candidate________________________________________

I/We hereby certify that I/We have examined (full name) Thiru/Thirumathi /Selvan/Selvi________________________________________

a Candidate__________for employment under the Government as __________in the

__________________________Office in the________________________________

____________department and whose signature is given above and cannot discover that he/she has any disease, communicable or otherwise constitutional affliction or bodily infirmity/except that his/her weight is in excess of/below the standard prescribed or except.

I/We do not consider this a disqualification for the employment he/she seeks.

His/Her age is according to his/her own statement Years and by appearance about Years

I/We also certify that he/she has marks of smallpox/vaccination.

Chest measurement in On full inspiration
On full expiration
Difference expansion

Weight in Kg.

Cardio – Vascular System

Respiratory system

His/Her vision is normal

Hypermetropic/ Myopic/ Astigmatic/

(Here enter the degree of defect and the strength of correction glasses)

Hearing is normal/defective (much or slight)

Urine – Does chemical examination show-

(I) Albumen (II) Sugar State Specific gravity

Personal marks (at least two should be mentioned) For Identification

1.

2.

Signature:
Rank:
Designation:

Station:
Date:

President

Members (i)
(ii)
Station:
Date:

2

The candidate must make the statement required below prior to his/her medical examination and must sign the declaration appended thereto. His attention is specially directed to the warning contained in the note below:-

1. State your name in full

2. State your age and date of Birth

3. (a) Have you ever had small-pox intermittent or any other fever, enlargement or suppuration of glands, spitting of blood, asthma, inflammation of lungs, heart disease fainting attacks, rheumatism, appendicitis?

OR

(b) Any other disease or accident requiring confinement to bed and medical or surgical treatment?

4. When were you last vaccinated

5. Have you or any of your near relation been afflicted with consumption, serefula gout, asthma, fits, epilepsy or insanity?

6. Have you suffered from any form of nervousness due to over work or any other cause?

7. Furnish the following details concerning your family

Father's age, if living and state of health

| Father's age, if living and state of health (1) | Father's age at death and cause of death (2) | Number or brothers living, their ages and state of health. (3) | Number of brothers dead, their ages at and cause of death (4) |
|---|---|---|---|
| | | | |

| Mother's age, if living and state of health (1) | Mother's age at death and cause of death (2) | Number of sisters living, their ages and state of health. (3) | Number of sisters dead, their ages at and cause of death (4) |
|---|---|---|---|
| | | | |

I declared all the above answers to be, to the best of my belief, true and correct,

Candidate's Signature

---

Note:- The candidate will be held responsible for the accuracy of the above statement. by wilfully suppressing any information he will incur the risk of losing the appointment and if appointed, of forfeiting all claim to superannuation allowance or gratuity

Medl. I-68.

## பிற்சேர்க்கை -IV

# கணினி வழித் தேர்வு

## முக்கிய விதிமுறைகள்

## கொள்குறிவகைவினாத்தாள்

**a)** ஒரே நேரத்தில் ஒரு வினா மட்டுமே கணினித்திரையில் தோன்றும்.

**b)** தேர்வு எழுதுவதற்கான கால அளவானது, திரையின் மேல் வலது மூலையில் உள்ள count down timer மூலம் காண்பிக்கப்படும். இது மீதமுள்ள நேரத்தை Time Left: என காண்பிக்கும். தேர்வின் தொடக்கத்தில், timer 180 நிமிடங்களைக் காண்பிக்கும் (தேர்வில் உதவியாளருடன் வரும் தகுதியான மாற்றுத் திறனாளி விண்ணப்பதாரர்களுக்கு 240 நிமிடங்கள்). இது காலப்போக்கில் படிப்படியாகக் குறையும். Timer பூஜ்ஜியத்தை அடையும்போது, தேர்வு தானாகவே முடிவடையும், அதன்பிறகு உங்கள் தேர்வானது கணினி அமைப்பால் தானாகவே சமர்ப்பிக்கப்படும்.

### c) கேள்விஎண் பெட்டி:

1. திரையின் வலது பக்கத்தில் காட்டப்பட்டுள்ள கேள்வி எண் பெட்டியானது பின்வரும் குறியீடுகளில் ஒன்றைப் பயன்படுத்தி ஒவ்வொரு கேள்வியின் நிலையையும் காண்பிக்கும்



நீங்கள் இன்னும் இந்த வினாவினை பார்க்கவில்லை



நீங்கள் இன்னும் இந்த வினாவிற்கு விடையளிக்கவில்லை



நீங்கள் இந்த வினாவிற்கு விடையளித்துவிட்டீர்கள்.



நீங்கள் இன்னும் விடையளிக்கவில்லை ஆனால் வினாவினை மீண்டும் பார்ப்பதற்காக குறித்துள்ளீர்கள்.



நீங்கள் விடையளித்துவிட்டு மீண்டும் சரிபார்க்க குறித்துள்ளீர்கள். அவ்வாறு சரிபாக்க இயலாவிட்டாலும் உங்கள் விடைகள் மதிப்பீட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படும்

'Marked for Review' என்கிற நிலையில் உள்ள கேள்விகளை மீண்டும் ஒரு முறை நீங்கள் சரிபார்க்க வேண்டும் என்பதை தெரிவிக்கின்றன.

2. .கேள்விஎண் பெட்டியின் இடது பக்கத்தில் தோன்றும் ">" அம்புக்குறியைக் கிளிக் செய்வதன் மூலம் கேள்வி எண் பெட்டியின் அளவை நீங்கள் குறைக்கலாம். இதன் மூலம் திரையில் உங்கள் கேள்வியை பெரிதாக்கிப் பார்க்கலாம். கேள்வி எண் பெட்டியை மீண்டும் பார்க்க விரும்பினால், திரையின் வலதுபுறம் உள்ள "<" அம்புக்குறி மீது கிளிக் செய்யவும்.

   உங்கள் கேள்விப் பகுதியை மேலிருந்து கீழாகவோ, கீழிருந்து மேலாகவோ ஸ்க்ரோல் செய்யாமலேயே பார்க்க விரும்பினால்  மற்றும்  ஆகிய குறிகளைப் பயன்படுத்தலாம்.

3. பதிலளிக்கப்பட்ட வினாக்கள், பதிலளிக்கப்படாத வினாக்கள், பார்க்கப்படாத வினாக்கள், சரிபார்ப்பதற்காக குறிக்கப்பட்டுள்ளவை மற்றும் பதிலளிக்கப்பட்டு மீண்டும் ஒரு முறை சரிபார்ப்பதற்காக குறிக்கப்பட்டுள்ளவை ஆகிய அனைத்தும் தொகுக்கப்பட்டு கேள்வி எண் பெட்டியின் மேலே காட்டப்படும்.

## d) ஒருகேள்விக்கு விடையளித்தல்

i) வினாக்களானது ஏறுமுகவரிசைப்படி ஒவ்வொன்றாக கணினித்திரையில்தோன்றும். அதற்கு ஒன்றன்பின்ஒன்றாக விடையளிக்கவும்.
ii) ஒருவினாவிற்கான விடையைத் தேர்வுசெய்ய அதற்கெனஅளிக்கப்பட்டுள்ள விடைத்தெரிவுகளில் ஒன்றின் மீது கிளிக் செய்யவும்.
iii) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்தபின் உங்கள் விடையை சேமிக்க Save and Next பட்டன் மீது கிளிக் செய்யவும் .அவ்வாறு செய்யாவிட்டால், உங்கள் விடைகள் சேமிக்கப்படமாட்டாது.
iv) நீங்கள் தேர்ந்தெடுத்த விடைத்தெரிவை நீக்கவேண்டுமெனில், தேர்ந்தெடுத்துள்ள விடைத்தெரிவின் மீதுள்ள பட்டனை கிளிக்செய்யவும் அல்லது Clear Response பட்டன் மீது கிளிக்செய்யவும்.

## e) படங்களைப் பெரிதாக்குவதற்கான அறிவுறுத்தல்கள்

வினாவில் வழங்கப்பட்டுள்ள படத்தை பெரிதாக்கிப் பார்க்க, படத்தின் மீது கிளிக் செய்து மவுசில் உள்ள ஸ்க்ரோலிங் வீலை சுழற்றவும்.

விண்ணப்பதாரர்கள் ஏதேனும் முறைகேட்டில் ஈடுபடுவது கண்டறியப்பட்டால், தேர்வாணையம் எடுக்கும் நடவடிக்கை / தண்டனைக்கு உள்ளாக நேரிடும்.

## பிற்சேர்க்கை-V

## தெரிவு முறை குறித்த உத்தேச கால அட்டவணை

| வ.எண் | நிகழ்வு | கால வரிசை |
|---|---|---|
| 1. | **இணையவழி விண்ணப்பத்தினை விண்ணப்பிக்க/ விண்ணப்பத்திலுள்ள விவரங்களைத் திருத்த / கட்டணம் செலுத்த இறுதி நாள்** | 12.10.2022 |
| 2. | **இணையவழி விண்ணப்பத்தை திருத்தம் செய்வதற்கான காலம்** | **17.10.2022 நள்ளிரவு 12.01 முதல்**<br>**19.10.2022 இரவு 11.59 வரை** |
| 3. | **சான்றிதழ்களை பதிவேற்றம் செய்ய / மாற்ற / மீள்பதிவேற்றம் செய்ய இறுதி நாள்** | 09.12.2022 |
| 4. | **கணினி வழித் தேர்வு முடிவு வெளியீடு** | **பிப்ரவரி 2023** |
| 5. | **சான்றிதழ் சரிபார்ப்பு / நேர்முகத் தேர்வு** | **மார்ச் 2023** |
| 6 | **கலந்தாய்வு** | **மார்ச் 2023** |

**செயலாளர்**